பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 2	ஞாயிறு 2-4-39 வெகுதான்ய௵ பங்குனிமீ 20௳	முத்து 1

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1. பேச்சு சுதந்திரமா இது?	...	2
2. டாக்டர் ராஜனின் ஆயுர்வேதம்	...	3
3. குறிப்பு	...	4
4. தென்றல் காற்று	...	6
5. வார நடப்பு	...	8
6. திருபுரி தமாஷ்கள் (ஏ. ஸ்ரீ. வேங்கடாச்சாரி, பி. ஏ.)	...	9
7. திண்ணையில் (ராவ்சாகேப், கே. சுப்ரமண்யம்)	...	12
8. பத்ராசலம் (ஸ்ரீ துமில் சுந்தரேசன்)	...	14
9. ஏமாந்தது யார்? (ஸ்ரீமதி கமலா பத்மனபன்)	...	15
10. மாலதி (ஸ்ரீமதி. ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாஸன்)	...	17
11. விமோசனம் இல்லையா? (பே. சு. ஜகந்நாதன்)	...	19
12. இல்லொளி ("சுகப்ரியை")	...	20
13. துஷ்ட நண்பன்	...	24
14. கிராமத்தின் சீர்கேடு	...	25
15. பொன்னேரி மராமத்து	...	26
16. பழ வியாபாரம்	...	28
17. கால் நடை வியாதிகளின் சின்னங்கள்	...	29
18. மைசூர் இரும்புத் தொழிற்சாலை	...	31

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



பேச்சு சுதந்திரமா இது?

அன்று சென்னை அசெம்பிளியில் சர்க்கார் நடத்தையைக் கண்டித்துப் பேசிய பொழுது ஸ[ர் ப]ன்னீர்செல்வம், காங்கிரஸ் ஆட்சியின் கீழ அபிப்பிராய பேதத்திற்கும் பேச்சு சுதந்திரத்திற்கும் கூட இடமில்லை என்று புகார் செய்தார். ஜனநாயக முறைக்கே விரோதமாக இந்த அரசாங்கம் பேச்சுரிமைக்கு இடங்கொடுக்காமல் அடக்கு முறை நடத்துகிறது என்று மீசை துடிக்கப் பேசினர்.

காங்கிரஸ் சர்க்காரின் கீழ் பேச்சுரிமை இல்லையா? [அபிப்பி]ராய பேதத்தை வெளியிட முடியாமல் தவிக்கின்றன பத்திரிகைகள்? ஸர் பன்னீர்செல்வம் உள்பட சர்க்கார் எதிர்க்கட்சியினர் எல்லோரும் பேச்சுரிமை இழந்து வெகு அடக்கமாகத்தான் பேசிக்கொண்டு வருகிறார்களோ? கடற்கரைக் கூட்டத்தில் ஸர் பன்னீர்செல்வம் வெகு ஜாக்கிரதையாக, மட்டு மரியாதையாகத்தான் பேசினரோ?

ஹிந்தி எதிர்ப்பு என்ற பெயரை வைத்துக்கொண்டு வகுப்புத் துவேஷப் பிரசாரத்தை நோக்கமாகவே கொண்டு செய்யப்படும் பிரசங்கங்களிலெல்லாம் பேச்சு சுதந்திரம் இல்லாமல்தான் வசையை மாரியாகப் பொழிகிறார்களோ?

பிரதம மந்திரி இந்தக் கொடுமையின் சில அம்சங்களை அசெம்பிளியில் எடுத்துக் கூறினர். "ஹிந்தி எதிர்ப்பாளர்கள் பேசிய அழகிய பேச்சுகளின் நகல்களை எதிர்க்கட்சி அங்கத்தினருக்கு அனுப்பட்டுமா?" என்று கேட்டார். பத்திரிகைகளில் பிரசுரமாகும் பொய்கள் எவ்வளவு, பழிகள் எவ்வளவு? தினந்தோறும் வேளை தவறாமல் அப்பேர்ப்பட்ட தூர்க்கந்தச் சரக்கை ஜனங்களுக்கு அளித்தால் நாளடைவில் அது எங்கேபோய் முடியும்?

ஆரியர் என்றும் திராவிடர் என்றும் சரித்திரமே கண்டறியாத ஒரு புது வகுப்புணர்ச்சியைக் கிளப்பி, ஸர் பன்னீர்செல்வம் நாட்டிற்கு தனது காணிக்கையைச் செலுத்துகிறார். பெருவாரியான வியாபாரிகள் பிராமணரல்லாதாராக இருப்பதால்தான் விற்பனை வரி போடப்படுகிறது என்கிறார் ஒரு ஹிந்தி எதிர்ப்புப் பிரசங்கி.

அபிப்பிராயபேதம் வேண்டியமட்டும் இருக்கலாம். சர்க்காரை கங்கு கரையின்றித் தாக்கலாம்; பிசகுகளை எடுத்துக் கூறலாம்; ஹிந்தி எதிர்ப்பு நடத்தலாம்; விற்பனை வரியையும் எதிர்க்கலாம்; ஆனால் இதில் வகுப்புணர்ச்சியைப் புகுத்தி வசையை வாரி யிறைப்பது சரியா, நல்லதா? கட்சி பலம் பெறுவதற்காக சுலபமாக பொது மக்களை ஏமாற்றி உணர்ச்சிகளை விசிறி விட்டு வேடிக்கை பார்ப்பது சரியல்[லவா]?

ராஜாஜி பேச்சு சுதந்திரத்தைப் பறிக்கக் கூடாதென்றேதான் சும்மா இருப்[ப]தாக சட்டசபையில் சொன்னார். ஆன[ால்] இன்று நடக்கும் பிரசாரம் பேச்சு சுதந்திரமா? இல்லவே இல்லை. பே[ச்சு] உரிமையுண்டு, சுதந்திர முண்டு; வை[ய] உரிமையுண்டா எங்காவது?

பிரதம மந்திரி இவ்வளவு மாதங்க[ள்] சும்மா இருந்ததால் வேடிக்கையாக ஆர[ம்]பித்த ஒரு இயக்கம் இன்று வீண்போல் பெருகுகிறது. பொது மக்களின் மன[த்]தில் ஒரு துவேஷ புத்தியைக் கொஞ்ச[ம்] கொஞ்சமாக ஊசி போட்டு ஏற்றுகிறா[ர்]கள் விஷமிகள்.

சர்க்கார் இனியும் சும்மாவிருப்ப[து] நல்லதல்ல வென்று நமக்குத் தோன்றுகிறது. வசையாலேயே விற்பனையாகும் பத்திரிகைகளுக்கு ஒரு தடை ஏற்ப[டுத்த] வேண்டியது அவசியம்; எதிர்ப்பும் வ[ை]தலும் இன்னதென்று நிர்ணயம் வேண்டும்; வசையே வறையறுக்கப்ப[ட] வேண்டும்.

டாக்டர் ராஜனின் ஆயுர்வேதம்

வைத்திய மானியத்தை அளிக்கும்படியாகக் கேட்டு கனம் டாக்டர் ராஜன் அசெம்பிளியில் செய்த பிரசங்கம், முன்னுக்குப் பின் முரணாகவும், "டாக்டர் ராஜன் அவர்களா இப்படிப் பேசுகிறார்?" என்று திகைக்க வேண்டிய முறையிலும் அமைந்திருக்கிறது.

சர்க்கார் ஆயுர்வேதத்தை மாற்றாந்தாய் போல் கவனிக்கிறார்கள் என்று ஆயுர்வேத அபிமானிகள் புகார் செய்கிறார்கள். இதைக் கண்டிக்கிறார் வைத்திய மந்திரி. தான் ஆயுர்வேதத்தைக் கற்றிருப்பதாகச் சொல்லுகிறார்; ஆயுர்வேத கிரந்தங்களை மொழி பெயர்த்தும் இருக்கிறாராம். இப்படி ஆயுர்வேதத்தில் நிபுணராக இருப்பவர் அதே மூச்சில், ஆயுர்வேதம் வெறும் மந்திர சக்தியை நம்பி இருப்பது என்று கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது.

"சாஸ்திர ரீதியான ரோகநிதானத்திலும் சிகிச்சைமுறையிலும் மேல் நாட்டு வைத்தியம் பிரமாதமான முன்னேற்றம் அடைந்து விட்டது" என்று டாக்டர் ராஜன் சொல்லுகிறார்.

ஆயுர்வேதத்தைக் கசடறக் கற்றறிந்த டாக்டர் ராஜன் இப்படிக் கூறுவது நமக்கு வியப்பை அளிக்கிறது. "ரண வைத்தியம், எக்ஸ்ரே — ரேடியோ திராபி, பெண்கள் ரோகங்கள் முதலிய நூற்றுக்கணக்கான வழிகளில் மேல்நாட்டு முறை அடைந்திருக்கிற முன்னேற்றத்தை ஆயுர்வேதம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை" என்கிறார் டாக்டர் ராஜன். சாஸ்திர சிகிச்சையிலும் சில இதர விஷயங்களிலும் மேல் நாட்டு முறையில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் ரோக நிதானத்திலும் சிகிச்சையிலும் மேல் நாட்டு முறை ஆயுர்வேதத்தைக் காட்டிலும் மேலானது என்பதை டாக்டர் ராஜன் சொன்னாலும் கூட நாம் ஒப்புக்கொள்ள முடியாது. சொல்லப்போனால் மேல்நாட்டு முறையில் ரோக நிதானமே கிடையாது என்று கூட சிலர் நினைக்கலாம். மேல்நாட்டு முறையில் ரோகத்தின் சின்னங்களைக் கவனித்து சிகிச்சை செய்கிறார்கள்; ஆயுர்வேதத்தில் வியாதியின் மு[illegible]ணங்களை ஆராய்ந்து வைத்தியம் செய்கிறார்கள். ஆயுர்வேதத்தின் மூலாதாரக் கொள்கையான திரிதோஷ — வாதபித்த கப தோஷ நிதானம் தான் உண்மையான சாஸ்திரீய ஆராய்ச்சி என்பதில் சந்தேகமில்லை.

நம் நாட்டின் நிலைமைக்கு ஒத்தது ஆயுர்வேத சித்தமுறை சிகிச்சைதான். பெருவாரியான மக்களுக்கு சுலபமாகவும் அதிகப் பணம் செலவின்றியும் உபயோகப்படும் சிகிச்சை இதுதான். மேல்நாட்டு முறை நமது கைகண்ட முறைக்கு ஒரு நாளும் ஈடாகாது. டாக்டர் ராஜன் அசெம்பிளியில் வெளியிட்ட அபிப்பிராயங்கள் உண்மையிலேயே ஆயுர்வேத அபிமானிகளுக்குத் திகைப்பைக் கொடுக்கிறது. அவர்கள் சர்க்காரைக் குறை கூறியதில் பிசகென்ன? மாற்றாந்தாய் போல நடக்கிறார்கள் என்று சொன்னதில் தடையென்ன? வைத்திய மந்திரி ஆயுர்வேதத்தைப் பற்றி இப்பேர்ப்பட்ட முழுதிலும் பிசகான தப்பபிப்பிராயம் கொண்டிருக்கும்போது அவர் எப்படி ஆயுர்வேதத்திற்கு மற்ற முறையுடன் சம அந்தஸ்து கொடுக்கப்போகிறார்!

டாக்டர் ராஜன் இப்படிப் பேசிவிட்டதற்காக நாம் மிகவும் வருந்துகிறோம். அவர் மேல்நாட்டு முறையில் திறமைபெற்ற வைத்தியர் என்பதில் ஆட்சேபனை இல்லை. அதனால்தானோ என்னமோ அவர் ஆயுர்வேதத்தின் மகிமையை அறிய முடியவில்லை? நிபுண[illegible] அந்த இலாகாவில் நிர்வாகம் நடத்தப்போ[illegible]வதிலிருந்து வரும் கேடுகளில் ஒன்று இது. யாராவது வைத்திய மந்திரியாயிருந்தால் அவர் அபிப்பிராயத்தைக் கிளர்ச்சிசெய்து மாற்றலாம். டாக்டர் ராஜனின் அபிப்பிராயத்தை மாற்றமுடியுமா?

ஆகவே ஆயுர்வேத அபிமானிகளும் வைத்தியர்களும் இனி சும்மா இருக்கக்கூடாது. நாடெங்கும் ஆயுர்வேத முறையின் மேன்மையைப் பற்றி பிரசாரம் செய்யவேண்டும். வெங்கடரமண வைத்தியசாலை போல எங்கும் சிகித்சாலயங்கள் ஏற்படவேண்டும். இல்லாவிட்டால் ஆயுர்வேதம் நசித்துப்போய்விடும்.

குறிப்பு

முஸோலினி பேசுகிறார்

ஐரோப்பிய சரித்திரத்தின் முக்கியமான வேளையில் முஸோலினி வாய் திறந்து பேசிவிட்டார். இவ்வளவு நாட்களாய் நெருக்கடியைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தார். அவர் பேசினாலும் பேசாவிட்டாலும் அவர் அபிப்பிராயம் உலகத்துக்குத் தெரிந்தே இருக்கிறது. அதாவது 'ஜெர்மனி செய்தது ரொம்ப சரி' என்று முஸோலினி மூன்று தடவை சத்தியம் செய்யக் கூடியவரென்பதை உலகம் அறிந்திருக்கிறது. ஆனால் ஜன நாயக சர்க்கார்களுக்கு இருக்கும் மூளை தனி ரகமானதால் அவர்கள் யோசனையும் வேறு தினுசாக இருந்தது. "இந்த இத்தாலிக்கும் ஜெர்மனி ஐரோப்பாவில் பலமடைந்து வருவது கொஞ்சம் கூடப் பிடிக்காது. கூடிய விரைவில் முஸோலினி நமது பக்கம் வந்து விடுவார்" என்று நினைத்தார்கள். அவர்கள் இந்த நினைப்புக்குத் தகுந்தாற்போல இதாலியும் பிரிட்டரிடம் அடிக்கடி நட்புப் பேச்சுகள் நடத்திற்று. ஆங்கிலோ இதாலியன் சிநேகிதத்தைப்பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் பல்லவி பாடின. சேம்பர்லேன் இதாலியை நாளடைவில் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம்; அதற்குப் பிறகு பிரான்ஸுக்கும் இதாலிக்கும் உள்ள சச்சரவை நீக்கி விடலாம் என்று எண்ணினர்.

ஆனால் முஸோலினி தன் சொற்பொழிவில் ஆணித்தரமாக ரோம்-பெர்லின் அச்சை முறிக்க முடியாதென்று சொல்லிவிட்டார். ஜனநாயகங்கள் தங்களை ஒன்றும் செய்ய முடியாதென்றும் அவை வேறு நாடுகளுடன் ஒன்று சேர்ந்து கொள்ளுமானால் தாங்கள் எதிரிகளை எல்லா முனைகளிலும் எதிர்ப்பதாயும் பயமுறுத்தினர். இது வெறும் பயமுறுத்தல் மட்டுமல்ல; உண்மையில் சர்வாதிகாரிகளின் உண்மையான அறைகூவலைத்தான் காண்பிக்கிறது. ஏனென்றால் ஜனநாயகங்கள் ரஷ்யாவுடன் சேர்ந்து கொள்ளுமானால் சர்வாதிகாரிகள் நசுங்கிப் போய் விடுவார்கள். அதைத் தடுப்பதற்காகத்தான் ரஷ்யாவுக்கும் ஜனநாயகங்களுக்கும் நடந்து வரும் ஒற்றுமைப் பேச்சை முளையிலேயே கிள்ளி எறியப் பார்க்கிறார்.

சேம்பர்லேன் 'இந்தப் பயமுறுத்தலைக் கேட்டுப் பயந்து விடப் போகிறாரா என்பது கேள்வி. ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் சமீபத்தில் நடந்த பேச்சுகள் அவ்வளவு திருப்திகரமாய் இல்லாததைக் கவனிக்கும் போது சேம்பர்லேன் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பயப்படுகிறார் என்று தெரிகிறது. முஸோலினியின் பேச்சைக் கேட்ட பிறகு அவர் சமாதான நாடுகளை ஒன்று சேர்க்கும் விஷயத்தையே விட்டு விடுவார் என்று நம்புவது மிகையாகாது.

நியாயமற்ற கோரிக்கை

மீரத்தில் நடந்த முஸ்லீம் லீக் மகா நாட்டில் செய்யப்பட்ட பிரசங்கங்களில் வரவேற்புக் கமிட்டித் தலைவர் நவாப் ஸாடா லிக்வத் அலிகான் செய்த பிரசங்கம் முக்கியமானது. அப்பிரசங்கத்தில் இந்தியாவை இரண்டு பங்கு போட்டு ஒரு பங்கை ஹிந்துக்களுக்கும் மற்றொரு பங்கை முஸல்மான்களுக்குமாகக் கொடுத்து விட வேண்டும் என்ற அநியாயக் கோரிக்கையை வெளியிட்டிருக்கிறார். இவ்வித அபிப்பிராயத்தை முதல் முதலில் வெளியிட்டவர் ஸர் மஹமத் யாகூப். அப்போது அதைப் படித்து விட்டுச் சிரித்தோம். இந்த மாதிரி ஒரு அபிப்பிராயத்தைக் கேட்டதும் தமாஷாக இருந்தது. ஆனால் இந்த அபத்தத்தை ஒரு மகாநாட்டில் ஒரு பொறுப்புள்ள மனிதர் சொல்வதென்றால், அதை நன்றாகக் கவனித்து ஆராய்தல் அவசியமாகிறது.

இப்படி நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு சரித்திரத்தில் ஏதாவது ஆதாரமிருக்கிறதா? கிடையாது. இந்த தேசம் யாருக்குச் சொந்தம்? முஸல்மான்களுக்கல்ல; ஹிந்துக்களுக்குமல்ல. எந்த குறிப்பிட்ட ஜாதிகளுக்குமல்ல. இந்த தேசம் இந்தியர்களுக்குச் சொந்தமானது. தலைமுறை தலைமுறையாக பல ஜாதி மதத்தினர் இந்த தேசத்தில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அயல் நாட்டாரைக் கூட உபசாரத்துடன் வரவேற்று இடமளித்திருக்கிறது இந்த நாடு.

எந்த ஜாதியாராயினும் சரி, அவர்கள் இந்தியர்களானால் அவர்கள் இந்தியாவில் வசிக்கலாம். ஆனால் இந்தியர்கள் என்பதை மறந்தார்களானால் அவர்களுக்கு இந்தியாவில் இடமில்லை. இந்தியர்கள் என்பதை மறந்தவர்களுக்கு இந்தியா எதற்காக? இந்தத் தேசத்தில் பக்தி இல்லாதவர்கள் இந்த தேசத்தில் ஏன் வசிக்கவேண்டும்? தேச பக்தி கொண்டவர்கள் யாராவது தேசத்தை இரண்டாக வெட்டுவதை ஆதரிப்பார்களா?

முஸல்மான்களுக்கு இந்தியாவில் தனி இடம் வேண்டும் என்றால் நாளைக்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள் தனி இடம் கேட்கிறார்கள். அது மாதிரியே பார்ஸிகள், எல்லோரும். இப்படி தேசத்தைப் பிரித்துவிட்டால் நெல்லிக்காய் மூட்டைபோல் ஆகிவிடும். இப்போது ஐரோப்பாவில் நடக்கும் நாடகம் இந்தியாவிலும் நடக்கும். தேசத்தில் வேறுபாடுகளும் குழப்பமும்தான் உண்டாகும். அத்தகைய தலைவலி நமக்கு வராமல் பார்த்துக் கொள்ளவேண்டாமா?

ஆகையால் இந்தியாவைப் பிரிக்கும் எண்ணத்தை நண்பர்கள் விட்டு விடுவார்கள் என்று நம்புகிறோம். இந்த தேசத்தில் வாழ்பவர்கள் முதலில் இந்தியர்கள் என்பதை உணரவேண்டியது அவசியம்.

முஸ்லீம் தலைவர்கள் தங்கள் நியாயமான உரிமைகளுக்காகப்போராடலாம். தாராளமாக வாங்கிக் கொள்ளலாம். ஆனால் தேசத்தைக் குட்டிச் சுவராக்கும் எண்ணத்தை விட்டு விட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

பிச்சைக்காரர் பிரச்னை

சென்ற வாரம் பிச்சைக்காரர் பிரச்னையைப் பற்றி எழுதியிருந்தோம். ரோகிகளான பிச்சைக்காரர்களுக்கு தனி விடுதி அமைத்துக் கொடுத்து அப்புறப்படுத்தும் படியும், மற்றவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டோம். இதே விஷயத்தை சமீபத்தில் சென்னையில் நடந்த மாதர் கூட்டத்தில் வற்புறுத்தி யிருந்தார்கள். அச்சமயத்தில் தலைமை வகித்த பிரதம மந்திரி இதற்குப் பதிலளித்தார். பிச்சைக்காரர்கள் பிரச்னையை நாம் எண்ணுவது போல் எளிதாகத் தீர்த்து விட முடியாது என்று கூறினார். வறுமையின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்தப் பிரச்னையை தான் மறந்து விடவில்லை யென்று உறுதி கொடுத்தார்.

பிரதம மந்திரியின் வாக்குறுதி இவ் விஷயத்தில் அக்கரையுள்ள எல்லோருக்கும் திருப்தி அளிக்கக் கூடியது. காங்கிரஸ் சர்க்கார் கூடிய விரைவில் பிச்சைக்காரர்கள் விஷயத்தை ஆராய்ந்து தீர்மானமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறோம். இந்த விஷயத்தில் சர்க்காருக்குள்ள பொறுப்பை உணர்ந்து பொதுமக்களும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பார்கள்.

சுபாஷ் அறிக்கை

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் விடுத்திருக்கும் அறிக்கை நிலைமையை இன்னும் குழப்புவதைத் தவிர வேறொன்றுமில்லை. ஸ்ரீ பந்தின் தீர்மானம் தன் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானமோவென்று சுபாஷ் போஸ் காந்திஜியைக் கேட்கிறார். இது என்ன சந்தேகம்? ஸ்ரீ பந்த் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்போது "இதை காங்கிரஸ் தலைவர்மீது கொண்டு வரப்படும் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் என்று கருதக் கூடாது" என்று கூறினார். இப்படிச் சொன்ன பிறகு போஸ் சந்தேகப்பட வேண்டிய காரணமே இல்லை. வீணாகப் பழைய சமாசாரங்களைக் கிளறாதபடி காந்திஜியுடன் கலந்து பேசி கூடிய சீக்கிரத்தில் காரியக் கமிட்டியை நியமிப்பார் என்று எதிர் பார்க்கிறோம்.

ஐந்து அம்சங்கள்

கிராமப் புனருத்தாரணத்திற்கான ஒரு சரியான திட்டத்தில் பின்வரும் ஐந்து முக்கிய விஷயங்கள் அடைப் படையாக இருக்க வேண்டும் :

1. கல்வி.
2. கிராமப் பஞ்சாயத்து நிர்மாணம்
3. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வைத்திய சாலை.
4. நிலக் குத்தகையில் மாறுதல்.
5. எல்லா தேவைகளையும் கவனிக்கக்கூடிய கோவாப்ரேடிவ் ஸொஸைடிகள் ஆரம்பம்.

மேற்சொன்ன முக்கிய அம்சங்களைக் கொண்ட திட்டத்தை மாகாண சர்க்கார்கள் தெளிவாக வகுத்து அதை அமுலுக்குக் கொண்டுவர சட்டங்கள் இயற்ற முன்வர வேண்டும்.

ஆயிரக்கணக்கான படித்த வாலிபர்களுக்கு நிபுணர்களைக் கொண்டு கிராமப் புனருத்தாரண வேலையில் பயிற்சி அளித்து, ஒவ்வொரு வாலிபர் கையிலும் ஒரு கிராமத்தை ஒப்புவிக்க வேண்டும்.

பயிர்த் தொழிலிலும் பசுமட நிர்வாகத்திலும் முக்கியமாகப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். சுமார் ஐந்து வருஷ காலம் இந்த வேலை தொடர்ந்து நடைபெறுமானால் இந்திய கிராமங்கள் புத்துயிர் பெறுமென்பதில் சந்தேகமில்லை.

— ஸ்ரீ. வேங்கடரமணியின் பம்பாய் பிரசங்கம்.

தென்றல் காற்று

முஸோலினி காரமாகவும் 'கோபமாகவும் பேசுபவர். இது சேம்பர்லேன் சட்டைப் பொத்தானுக்குக் கூடத் தெரியும். அவருடைய குடைக்குத் தெரியாதா என்று கேள்வி வருகிறது. நான் அவர் குடையைப்பற்றிச் சொல்லப்போகிறதில்லை. ஏனென்றால் 'குடை, குடை' என்று பத்திரிகை ஆசிரியர்களும் சித்திரக்காரர்களும் இத்தனை நாளாக எழுதி நம்மைக் குடைந்து விட்டார்கள்.

* * *

முஸோலினி வேடிக்கையாகக் கூடப் பேசுகிறார். சகோதரத்வம் சகோதரத்வம் என்று சில பேர்கள் சொல்லுகிறார்களல்லவா? அதைப்பற்றி அவர் குறிப்பிட்டு "ஐயா! எங்களுக்கு சகோதரத்வம், சகோதரித்வம் முதலிய நாசமாய்ப் போன ஒரு துவந்தமும் வேண்டாம்" என்கிறார். இனிமேல் "சகோதர சகோதரிகளே!" என்று சேம்பர்லேன் பிரசங்கம் செய்வதை விட்டு விடலாம். இல்லாவிட்டால் ஆங்கிலோ இதாலிய சிநேகிதத்திற்கு அதனால் பாதகமுண்டாகுமல்லவா?

* * *

"சகோதர சகோதரிகளே!" என்று ஆரம்பித்துப் பேசும் பழக்கம் நமக்கு மிகவும் சகஜமானது. கூட்டத்தில் சகோதரிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நமது பிரசங்கிகள் அதற்காக சகோதரிகளை விட்டுக்கொடுப்பது கிடையாது. ஆனால் இந்தப் பொல்லாத ஸோஷலிஸ்டுகள் வந்தாலும் வந்தார்கள், 'சகோதர சகோதரிகளே! பறந்தேபோய்விட்டது. "தோழர்களே!" என்று ஸ்ரீ நேரு முதல் அரைக்கால் தலைவர்கள் வரையில் எல்லோரும் பேசுகிறார்கள். 'தோழர்களே!' என்பது முஸோலினிக்குப் பிடித்தமாயிருக்கும் என்று ஒருவர் கூறுகிறார். ஆனால் ஸ்டாலின் 'தோழர்களே!' என்று கூப்பிடுவதால் முஸோலினிக்கு அந்த வார்த்தை பிடிக்காதென்று இங்கிருந்தே சாபம் கொடுக்கலாம்.

* * *

இந்திய-பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தத்தைப் பற்றி ஸர். எச். எஸ். பால் என்பவர் வெகு அழகாக உபமானம் சொல்லியிருக்கிறார். அது புதிய ஒயினை பழைய சீசாவில் கொட்டி வைத்தது போலிருக்கிறது என்கிறார். அது தவறு; பழைய ஒயினை புதிய சீசாவில் கொட்டி வைத்திருக்கிறார் என்று சொல்லவேண்டும். உபமான உபமேயங்களில் சென்னை ராஜதானியை வங்காளம் வென்று விடாது!

* * *

ஸ்ரீ ஜின்னா சட்ட சபையில் நடந்து கொள்ளும் விதம் ஜேம்ஸுக்குப் பிடிக்கவில்லை. ஜின்னாவை அவர் கிரேடா கார்போ என்று கூப்பிட ஜேம்ஸை மெர்லீன் டைட்ரிச் என்று ஜின்னா ஆசீர்வாதம் செய்ய ஒரே வேடிக்கையாகப் போய்விட்டது. ஜின்னாவை போரிஸ் கார்லாப் என்று கூட ஜேம்ஸ் சொல்லவில்லை. ஜேம்ஸை ஹார்டி என்று கூட ஜின்னா கூப்பிடவில்லை. அங்கத்தினரை ஒரு நடிகர் என்று அழைக்க வேண்டுமென்று தோன்றினால் ஆண் நடிகராகவாவது வைத்திருக்கக் கூடாதா?

* * *

இந்திய சட்ட சபை அங்கத்தினர்களை நடிகர்களென்றால் சட்ட சபை ஒரு நாடக சாலை என்றுதானே ஆகிறது? இந்திய சட்ட சபைக்கு ஏற்பட்ட இத்தகைய அவமானத்தை நீக்க உடனே வைஸ்ராய் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுவார். சட்ட சபையின் ஆயுளை இன்னும் ஒரு வருஷம் நீடித்து சட்ட சபையின் கௌரவத்தைக் காப்பாற்றுவார்.

* * *

கிரிடிக் ஜான்ஸன் எமகாதகப் பேர்வழி என்று பாஸ்வெல் சொல்லுகிறார். அவர் சம்பாஷணையில் ஒருவருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டாராம். யாருடனாவது அவர் பேசினால் கடைசி வார்த்தை சொல்பவர் அவராகத்தான் இருக்கவேண்டும். அதாவது கடைசி வார்த்தை சொல்லுகிறவர்தான் ஜெயித்தவர் என்பது நம்பிக்கை.

* * *

சென்ற வாரம் மாதர் கூட்டத்தில் பேசினார் ராஜாஜி. ஸ்ரீ முத்துலக்ஷ்மி ரெட்டி வந்தனோபசாரம் கூறியபிறகு கடைசியாக இன்னொரு தடவை ராஜாஜி பேச ஆசைப்பட்டார். "பெண்கள் எல்லா விஷயங்களிலும் தாங்கள்தான் கடைசி வார்த்தை பேச வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அதனால்தான் நான் கடைசி வார்த்தை பேசுவதற்காக மறுமுறை எழுந்தேன்" என்றார்.

* * *

உண்மையில், பெண்மணிகள் கடைசி வார்த்தை பேச ஆசைப்பட்டிருந்தால் மறுபடியும் ஸ்ரீமதி முத்து லக்ஷ்மிரெட்டி பேச ஆரம்பிக்க, அவருக்குப்பிறகு ராஜாஜி பேச....இப்படியாக மாதர்கள் கூட்டம் ரொம்ப ஸ்வாரஸ்யமான விஷயமாகப் போயிருந்திருக்கும். ஆனால், மாதர்கள் அன்று அடைந்த தோல்வியை அவர்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

* * *

சிந்தாதிரிப்பேட்டையில் சில காங்கிரஸ்காரர்களை ஹிந்தி எதிர்ப்புப் பேர்வழிகள் தாக்க வந்தார்களாம். ஆனால் தூரத்தில் ஓர் ஊர்வலத்தைப் பார்த்ததும் ஓடிவிட்டு, அதற்குப் பிறகு பொதுக்கூட்டம் கலைந்ததும் சில காங்கிரஸ்காரர்களைத் தாக்கினார்களாம். ஹிந்தி எதிர்ப்பாளர்களுக்கு ஓட்டப் பந்தயத்தில் ஜயிக்க ஒரு பயிற்சிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டால் பின்னால் உபயோகமாயிருக்கும்.

* * *

ஹிந்தி எதிர்ப்புக்கும் வியாபார வகும் என்ன சம்பந்தம் என்று ஒருவர் கேள்வி கேட்டார். ஏன், ஹிந்தி எதிர்ப்பாளர்கள் வியாபார வரி செலுத்தவில்லையா என்று மற்றொருவர் பதில் சொல்லுகிறார். செலுத்தாவிட்டால் கூட அவர்கள் எதிர்ப்பதற்குச் சுதந்தரம் இருக்கிறது. கன்னாபின்னா வென்று திட்டக்கூட சுதந்தரம் இல்லாவிட்டால் இது என்ன ஐயா ஜனநாயகம்!

மைசூர் பொருட்காட்சி சாலைத் தோற்றம்

(By Courtesy of the Govt. of Mysore).

வார நடப்பு

காந்திஜி, உண்ணா விரதத்தின் மகிமையைப் பற்றி எழுதிய ஒரு கட்டுரையில், கடவுளிடத்தில் ஆழ்ந்த பக்தியும் சத்தியமும், அஹிம்சையில் பூரண நம்பிக்கையுமிருந்தாலொழிய உண்ணா விரதம் வெற்றி யடையாது என்று விளக்கிக் காட்டுகிறார்.

ராஜ்கோட் நெருக்கடி முடிவின் பிறகு காந்திஜி சமஸ்தான விஷயங்கள் சம்பந்தமாக ஓர் புதிய தீர்மானத்திற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸுக்கும் இன்னும் மற்ற சம்ஸ்தான காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கும், சமஸ்தானப் போராட்டத்தை நிறுத்தும்படி அறிக்கை விடுத்திருக்கிறார். சமஸ்தானாதிபதிகளுக்கு, ராஜ்கோட் நெருக்கடியின் முடிவைப்பற்றியும், வைசிராயின் ஆலோசனையையும் யோசிக்க கொஞ்சம் அவகாசம் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார்.

"நியூ யார்க் டைம்ஸி"ன் விசேஷ நிருபர் காந்திஜியை பேட்டி கண்டு சில முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசினார். ஐரோப்பிய யுத்தம் நேர்ந்தால் இந்தியாவின் அயல் நாட்டுக்கொள்கை எந்த விதமாக இருக்கும் என்று காந்திஜியைக் கேட்டார். இவ்வளவு முக்கியமான விஷயங்களைப்பற்றி வெகு சுலபமாக காந்திஜியின் அபிப்பிராயத்தை அந்த நிருபர் தெரிந்து கொண்டு விட முடியுமா?

ஐரோப்பாவில் மண்ணாசை கொண்டு பறக்கும் ஹிட்லருக்கும் எந்த விதத்திலாவது தேசத்தின் அமைதியைப் பாதுகாக்கும் சுபாவமுள்ள சேம்பர்லேனுக்கும், உலகத்துக்கே ஒரு செய்தி அனுப்பும்படி மறுபடியும் அந்நிருபர் காந்திஜீயைக் கேட்டார். அதற்கு காந்திஜீ தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார். "பிரிட்டிஷ் பிரதம மந்திரி, ஜனநாயகப் பிரதிநிதிகளுடன் கூடி ஆயுத பரிகரணம் செய்து இம்மாதிரியான ஜெர்மன் அக்ரமத்தைக் கண்டிப்பாரா என்று ஏங்குகிறேன்" என்றார். இப்படிக் கண்டித்தால் ஹிட்லர் தன் அநீதச் செயல்களை நிறுத்துவார் என்று சொன்னார்.

திருபுரிக் கூட்டத்திற்குப் பிறகு காங்கிரஸின் போக்கு எப்படி இருக்குமோ என்று யோசிப்பவர்கள் சந்தேகத்தை நீக்க சுபாஷ் பாபு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் ஸ்ரீ பந்த் திரிபுரியில் கொண்டு வந்த தீர்மானத்தின்பேரில் தனக்கிருக்கும் அதிருப்தியைக் காட்டி இருக்கிறார். சீக்கிரத்திலேயே காந்திஜியை நேரில் சந்தித்து காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் பற்றி பேசப் போவதாகச் சொல்லி இருக்கிறார். இதனிடையில் காந்திஜியும் முடிந்தால் அவரைக் கண்டு பேசலாம் என்றும் தெரிவிக்கிறார்.

ஸ்ரீ பந்த் தீர்மானத்தின் படி காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுப்பதைப் பற்றி, காங்கிரஸ் தலைவர் தன்னைக் கேட்டாலொழிய, காந்திஜீ தன் அபிப்பிராயத்தைக் கூற முன் வரமாட்டார் என்று தெரிகிறது.

அகில இந்திய முஸ்லீம் லீக் தலைவர் ஸ்ரீ. ஜின்னா, காங்கிரஸின் மேல் வழக்கப்படி பழி சுமத்தித் திட்டினார். இந்த சமஷ்டியாலும், இந்த காங்கிரஸ் ஆதிக்கத்தாலும் சிறு பான்மையோருக்கு அனுகூலமே இல்லை என்று வருந்தினார். அதற்கு ஸ்ரீ புலாபாய் தேசாய் சரியாக விவரித்துப் பதிலளித்தார். காங்கிரஸ அதிகாரம் வகிக்கும் மாகாணங்களில் சர்க்கார் சிறுபான்மையோருக்கு மிகுந்த சலுகை காட்டி வருகிறார்கள் என்று எடுத்துக்கூறினார்.

ஐரோப்பிய நிலைமை சென்ற வாரத்தைப் போல் தான் இருக்கிறது. ஹிட்லர் அனுப்பிய நெருப்புப் போன்ற இறுதிக் கடிதத்துக்கு பயந்து மெமெலும் அவர் ஆதிக்கத்துக்குள்ளாகி விட்டது. போதாக் குறைக்கு டென்மார்க்கிலுள்ள ஜெர்மனியர்களும் ஸுடேடன் பிரதேசத்திலிருந்தவர்களைப் போல் சுயேச்சையடைய வேண்டும் என்கிறார்களாம். வெஸ்வர்க்கின் தலைவிதி எப்படியோ?

செக்கோஸ்லோவாகியா, மெமல், இவ்விரண்டையும் சேர்த்துக் கொண்டதோடு ஹிட்லரின் "வஸந்தகாலத் திட்டம்" நிற்கப் போவதாக டாக்டர் கொவேல்ஸ் சொல்லி இருக்கிறார்.

இந்தத் தாம் சேம்பர்லேன் ஹிட்லர் செயல்களைக் கட்டாயம் கண்டித்து விட்டார் என்றே எண்ணலாம். பிரிட்டிஷ்—பிரான்சு ஒற்றுமையால் ஜன நாயகம் அபாயத்தினின்றும் மீளப்போகிறது என்ற நம்பிக்கையை மறுபடியும் கிளப்பி விட்டிருக்கிறார்கள்.

முஸோலினி ரோம்-பர்லின் அச்சுக்கு இடையூறு வராமல் பாதுகாக்கப் போவதாகத் தெரிவிக்கிறார். ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் வெகு நாட்களாக இருக்கும் நேசத்தன்மை, இத்தாலிக்கு மிக்க நன்மையளித்திருப்பதாக, முஸோலினி அவர் சொற்பொழிவில் சொன்னார். பிரான்ஸைச் சேர்ந்த சில நாடுகளில் தனக்கு இருக்கும் உரிமையை வற்புறுத்தினார்.

திரிபுரி தமாஷ்கள்

(ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி, பி. ஏ.)

யானைவரும் பின்னே

ராஷ்ட்ரபதியின் யானை ஊர்வலத்தைக் காண்பதற்காக விஷ்ணுதத்த நகருக்கு வரும் ரஸ்தாவின் இருபுறங்களிலும் பல்லாயிரக் கணக்கில் ஜனங்கள் குழுமி யிருந்தனர். ஊர்வலம் வருவதற்கு நேர மாகவே ஆங்காங்கு ஜனங்கள் கோஷ்டிக ளாகப் பிரிந்து பண்டித பந்தின் தீர் மானத்தைப் பற்றி வெகு ருசிகரமாய் விவாதித்துக்கொண்டிருந்தனர். எங்கு திரும்பினாலும் அதைப்பற்றியே பேச்சு. ராஜீய சம்பந்தமற்ற விஷயங்களைப் பேச யாராவது கிடைப்பார்களா என்று தேடி யலைந்தேன். காலை 8 மணிக்கு ஒரு சரு வேல மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, ஒரு புட்டுக்கூடைத் தக்காளிப் பழங் களை விரைவில் காலிசெய்துகொண்டிருந்த ஒரு பேர்வழியைக் கண்டேன். அவரிடம் ஏதாவது ருசிகரமான விஷயம் இருக்கு மென்று நினைத்து அருகில் உட்கார்ந் தேன். தக்காளிப்பழத்தின் விலையை விசாரித்து பேச்சை ஆரம்பித்தேன். நான் ஏமாற்றமடையவில்லை யென்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கர்னாடக மாகாணத்தைச் சேர்ந்த ஒரு வாலிப வக்கீல். அவருடைய இளம் மனைவி அருகில் உட்கார்ந்துகொண்டு நிலக்கடலையை வேகமாய் உரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். பசியை ஆற்றிக்கொண்டே சம்பாஷணையில் ஈடு பட்டேன். அவர் கர்னாடகக்காரரா யிருந்தும் கன்னடம் பேசாமல் மனைவி யுடன் வேறு ஏதோ பாஷை பேசியது சற்று ஆச்சர்யமாகவே இருந்தது. அந்த அம்மாள் அவருடைய மனைவிதான் என்று ஊர்ஜிதம் செய்துகொண்டபோது ஆச்சர்யம் அதிகரித்தது. "நீங்கள் பேசு வது என்ன பாஷை?" என்று கேட் டேன்.

"மகாராஷ்டிரம்" என்று அவர் பதி லளித்தார். அந்தப் பதிலுடன்கூடவே, சதிபதிகள் இருவருமாகச் சிரித்தார்கள். சிரிப்பு நின்றதும் அவர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். உடனே அவருடைய மனைவி இரண்டு கைகளைக்கொண்டு அவ ருடைய வாயைப் பொத்திவிட்டாள். அவர் அந்தக் கைகளை அப்புறப்படுத்தி விட்டு, நிலைமையை விளக்கினர். அதற் குப் பிறகு நாங்கள் மூவருமாகச் சிரித்து ஆனந்தித்தோம்.

மகாராஷ்டிர மாதர்கள்

விஷயம் இதுதான். மகாராஷ்டிரப் பெண்கள் பிடிவாதமும் துணிச்சலும் நிறைந்தவர்கள். அவர்கள் கர்னாடக யுவர் களை மணந்துகொள்வது வெகு சகஜம். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும், மகாராஷ்டிரம் தவிர வேறு எந்த பாஷை யையும் பேச மறுக்கிறார்கள். கணவனை அல்லது உறவினர்களோ அவர்க ளுடன் பேசவேண்டுமானல், மகாராஷ் டிர பாஷையைக் கற்றுக்கொண்டுதா னகவேண்டும் என்ற நிலைமையை அவர் கள் ஏற்படுத்திவிட்டார்கள். நான் கண்ட வக்கீல் நண்பர் மனைவியுடன் இல் வாழ்க்கை நடத்துவதற்காக இருபத்து ஐந்து வயதுக்குமேல் புது பாஷையைக் கற்றுக்கொள்ளும் ரகத்தைச் சேர்ந்த கர்ன டகப் பேர்வழி. பத்து மாதங்களில் தன் மனைவியே தனக்கு மகாராஷ்டிரத்தை வெற்றிகரமாய் போதித்தாள் என்று அவர் சொல்லி முடித்தபோது சிரிப்பை அடக்க என்னால் முடியவில்லை. இவ்வளவு நிர்ப்பந்த நிருக்கையில் மகாராஷ்டிரப் பெண்களை ஏன் கர்னடக் யுவர்கள் தேடி யலையவேண்டுமென்று கேட்டேன். பதில் சொல்லும்போது அவருடைய முகத்தில் அசடு வழிந்தது. "அவர்களைவிட சிறந்த மனைவிகள் கிடைக்க முடியாது" என்ற ஒரே வாக்கியந்தான் அவர் கொடுத்த பதில்!

இதற்குள் முதல் யானையின் மணி யோசை கேட்கவே எல்லோரும் எழுந்து விட்டோம்.

சர்வம் ஹிந்துஸ்தானி மயம்

திரிபுரியில் ஆங்கிலம் அதிகமாக அடிபடவில்லே. எங்கு திரும்பினுலும் ஹிந்துஸ்தானிதான். பத்திரிகைப் பிரதிநிதிகள் சுமார் முன்னூறு பேர்களுக்குமேல் வந்திருந்தனர். அவர்கள்கூட சம்பாஷணைகளில் ஹிந்துஸ்தானியையே அதிகமாய் உபயோகித்தது குறிப்பிடத் தக்கது. வரவேற்புக் கமிட்டியில் பத்திரிகை இலாகாவின் தலைவரின் பெயர் ஸ்ரீமான் நாரதர். ஆனுல், அவர் மூன்ருவது யானை மீது கம்பீரமாய் நின்று கொண்டிருந்தாரே ஒழிய, குட்டிக் கலகங்களை சிருஷ்டிக்கவே யில்லை! விஷயாலோசனைக் கமிட்டியிலும், மகா சபையிலும் அநேகமாய் எல்லாம் ஹிந்துஸ்தானி பிரசங்கங்கள் தான். தென்னுட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் ஒன்றும் தெரியாமல் உட்கார்ந்திருந்தது பரிதாபகரமாகத்தானிருந்தது. கொஞ்ச கொஞ்சம் ஹிந்துஸ்தானி தெரிந்தவர்களின் முகங்களை அப்பொழுது பார்க்க வேண்டுமே? அவர்களுக்கு என்ன கிராக்கி! நமது பிரதிநிதிகளில் பலர் கட்டாயமாய் சில ஹிந்துஸ்தானி வார்த்தைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று.

மலைப் பிஞ்சுகள்

திரிபுரியில் ஒரு ஹோட்டல் வைத்து குறைந்தது ஒரு ஆயிரம் ரூபாயாவது லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை எந்தத் தமிழனுக்கும் இருக்கவில்லை. மத்ராஸி போஜன சாலா என்ற விடத்தில் ஆந்திரர்கள் தயாரித்துப் போட்ட சாப்பாடு அவர்களுக்கும், சோற்றிலிருந்த சிறு மலைப்பிஞ்சுகளுக்குந்தான் அர்ப்பணம். எனவே, மற்ற மாகாணங்களின் சாப்பாட்டு விடுதிகளை நாங்கள் நாடவேண்டியிருந்தது. எல்லா மாகாணங்களையும் விட ஐக்கிய மாகாணத்தின் சாப்பாடுதான் வெகு ஜோர்; போஷாக்குடன் கூடியதாகவும் நாகரீக மோஸ்தரிலும் இருந்தது. அங்கே நம்முடைய சைன்யங்கள் படையெடுத்ததால் நெருக்கடி எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. ஒன்றிரண்டு தினங்கள் புளி, சாம்பார், ரஸம் இல்லாமல் சாப்பிட்டு, நாக்குச் 'செத்துப்போன' சில பேர்வழிகள், மீண்டும் ஆந்திரா போஜனசாலைக்கு வந்தனர். வந்தவர்கள், அதைக் கொண்டுவா, இதைக் கொண்டுவா என்று ஹிந்துஸ்தானியில் கேட்க ஆரம்பித்தது கண்டு எல்லோரும் ஆச்சர்யத்துடன் சந்தோஷத்தையும் அடைந்தோம். இன்னும் சில தினங்கள் பழகியிருந்தால் நம்முடைய பிரதிநிதிகள் சாதாரணமாய்ப் பேசுவதற்குக் கற்றுக்கொண்டிருப்பார்களென்பது புலனுயிற்று.

திரிபுரியிலிருந்து 12 மைல் தூரத்தில் சலவைக் கற்களிடையே நர்மதை பிரவகிக்கும் காட்சி நிகரற்றது. அங்கே ஒரு கிராமத்தில் பால் வாங்கினேம். பால் குழம்பலாக நன்ருகத்தானிருந்தது. ஆனுல், "இதில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது?" என்று கேட்டோம். "தண்ணீர் இருந்தால்தானென்ன? நர்மதையின் புண்ய தீர்த்தமல்லவா?" என்று பதிலளித்து, இடையன் எங்களைப் பணியவைத்துவிட்டான்! எதிர்பாராத விடத்திலும் ஹாஸ்யம் ததும்புவதைக் கண்டு மகிழ்ந்தோம்.

போட்டி விலை

கதர், கிராம கைத்தொழில் கண்காக்ஷி வெகு விமரிசையாக இருந்தது. அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தார் அதற்குள் ஒரு மாதிரி ஹோட்டலை நடத்தினர். அங்கே முதல்தரமான சாப்பாடு. கைக்குத்த லரிசியுடன் ஏறக்குறைய தென்னுட்டு ருசிக்கேற்றவாறு இரண்டே அணுவுக்குப் போடப்படுவதாக வதந்தி பரவியது, எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல மோர் நிறையக்கொடுக்கிருர்களென்று சொன்னதுதான் தமிழர்களையும் ஆந்திரர்களையும் அங்கு காந்தம் போல் இழுத்துக்கொண்டு போய்விட்டது. ஒரு சில ஏழைகளுக்கு மலிவான கட்டணம் வாங்கி, அன்னமிட அங்கே ஏற்பாடு செய்திருந்தார்களே தவிர, ஒரு பெரிய பட்டாளத்துக்குச் சமைத்துப் போடத் தயாரில்லை. நிர்வாகிகள் திணறினர். என்ன செய்வதென்று தெரியவில்லை. வேறு வழியில்லாமல், மற்ற போஜன சாலைகளைப் பின்பற்றி கட்டணத்தை மறுநாளே ஆறணுவாக உயர்த்திவிட்டதால் தப்பிப் பிழைத்தனர். கிர்ப்

பந்தமில்லாத போட்டியுள்ள மார்க்கெட்டில் ஒரு பொருளுக்கு ஒரே விலைதானிருக்கமுடியும் என்ற பொருளாதார உண்மை நிதர்சனமாக இதன்மூலம் நிரூபிக்கப்பட்டது!

கண்காட்சி

கண்காட்சிக்குள் மற்றொரு முதல்தரமான தமாஷைக் கண்டோம் 'Democracy-A Maze'(ஜனநாயகம்-ஒரு ஜகஜ்ஜாலம்) என்ற போர்டு வெளியே ஆடம்பரமாயிருந்தது. ஒரு அணா டிக்கட்டு வாங்கி உள்ளே நுழைந்தோம். பத்ம வியூஹம் போல் சுற்றிச் சுற்றிச் சென்றோம். நீருக்குள் எழெட்டுப் புறாக்கள் விளையாடுவது கண்டு வியந்தோம். அது ஒரு சிமிட்டிக் குளம். அதற்குள் எப்படி அந்தப் புறாக்கள் உயிர் பிழைத்திருக்கின்றன வென்று யோசித்தோம். பலர் யோசியாமல் அப்பால் சென்றனர். சற்று யோசித்ததில் உண்மை தெரிந்தது. சிமிட்டியால் குளமொன்றைக் கட்டி அதனடியில் எழெட்டு புறாக்களை விட்டு தான்யாதிகளையும் போட்ட பிறகு மேலே ஒரு கண்ணடியைப் போட்டு, சாமர்த்தியமாய் மூடி அதன் மேல் ஜலம் விட்டிருந்தது புலப்பட்டது. மேலெழுந்தவாறு பார்த்தால் இந்த உண்மை யாருக்கும் தெரியாது. ஜனநாயகத்தில் இம்மாதிரி வித்தைகள் சகஜமென்பதை இது சுட்டிக் காட்டுவது போலிருந்தது. வோட்டு மோசடி, ஆள் மாறாட்டம் முதலியவை சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தன. வேறோரிடத்தில் 'இந்திரஜித்' வதம் என்பதை நடித்துக் காட்டினார்கள். தலை தனியாக மேலே வருவதும் துண்டிக்கப்பட்டதும் காண்பிக்கப்பட்டன. பல ஸ்திரீகள் அலறினர். ஆனால், இரண்டு மூன்று ஆட்கள் வெகு சாமர்த்தியமாக அதை நடித்துக் காட்டுகிறார்களென்பதை பாய்களிலுள்ள துவாரங்கள் வழியாகப் பார்த்துத் தெரிந்து கொண்டோம். இதைப்போன்ற மோசடிகளும் ஜனநாயகத்தில் சாத்தியமே என்று அறிவுறுத்துவது இதன்நோக்கம்.

அணையா விளக்கு

வேறிடத்தில் இரு புறங்களிலும் இரண்டு கழுதைகளின் படங்களுடன் நிலைக்கண்ணாடி யொன்று வைக்கப்பட்டிருந்தது. "நீயும் வந்தாயா?" என்று கண்ணாடியின் கீழ் எழுதப்பட்டிருந்தது. எல்லோரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தனர். அந்த நிலைக்கண்ணாடி ஒரு புறம் 'கான்வெக்ஸ்' மற்றொருபுறம், 'கான்கேவ்' ஆக இருந்தது. எனவே பார்க்கச் சென்றோரின் உருவங்கள் எம்மாதிரி மாறின என்பதைப்பற்றி சொல்லவேண்டியதில்லை. இதனால் ஜனங்களின் சிரிப்பு அதிகரித்தது. ஜனநாயகம் நேர்மையற்றிருந்தால், எவ்வளவு விபரீதமான பலன்கள் சம்பவிக்குமென்பதை இது வற்புறுத்துவது போலிருந்தது. இம்மாதிரி சில இடங்களைக் காண்பித்தபிறகு காங்கிரஸில் சேர்ந்து ஒழுங்காகக், கட்டுப்பாடாக வேலைசெய்வதுதான் சிறந்த ஜனநாயகம் என்பதைக் குறிப்பாக எடுத்துக் காட்டும் பல உதாரணங்களிருந்தன.

தேசத்துக்காக தங்கள் உயிரை தத்தம் செய்த வீரத்தியாகிகளை இளைஞர்கள் மறக்கவில்லை. மாகாணம் வாரியாக ஸ்தம்பங்களை நாட்டி அவர்களுடைய பெயர்களை அவற்றில் வரைந்து எல்லோரும் காண்பதற்கு அனுகூலமான ஓரிடத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். அஸ்தமித்தவுடன் பல நூறு அகல்கள் அங்கே எரியும். எல்லோருடைய மனதிலும் அணையா விளக்காக அவர்களுடைய பெருமை ஜ்வலிக்க வேண்டுமென்பது தான் இதன் நோக்கம்.

ஜவஹர் கர்ஜனை

திரிபுரியில் பொழிந்த பிரசங்க மாரிகளில் மிகச் சிறந்தவை யாவை என்று கேட்டார் ஒரு நண்பர். ஸ்ரீமான்கள் தத்மஜீம்தார், ஆர். டி. பாரத்வாஜ், எஸ். ஸத்யமூர்த்தி மூவரையும் ஒரு ரகத்தில் சேர்க்கலாம். ஆனால், உணர்ச்சியைக் கிளப்பாவிடினும் காரண விமர்சனங்களுடன் பேசியவர்களில் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண், நமது பிரதம மந்திரி இருவரையும் குறிப்பிடலாம்.

ஜவாஹர்லால் நேருவின் பேச்சு ஒரு தனி தினுசு. எத்துடனும் அதை ஒப்பிடவே முடியாது. வங்காளிகள் மகாசபையில் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்குப் பிறகு அவர் செய்த பிரசங்கம் கல்லையும் உருக்குமென்று சொன்னால் மிகையாகாது.

திண்ணையில்

(ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்)

"தாத்தா! நம் சம்ஸாரங்களில்தான் வரும்படி குறைச்சல். செலவுக்கு கட்ட வில்லை என்று அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறோமே. சர்க்காரில்கூட அப்படித் தானும். அதற்காக சர்க்காரில் புது வரி போடப்போறாளாம்."

"என்னென்ன வரிகள்?"

"எலெக்ட்ரிக் மேல், பெட்ரோல் மேல், மோட்டார் எண்ணெய் மேல், தமாஷ்கள், ஆட்டம், ஸினிமா, சர்க்கஸ் பேரில், பெரிய வியாபாரக்காரன் பேரில். இந்த மாதிரியெல்லாம் பேச்சு நடந்துகொண்டு வருகிறது."

"சரி! பின்னே என்ன பண்ணுவார்கள்? செலவுக்குச் சரிக்கட்ட வேண்டாமா? கள்ளுக்கடை, சாராயக்கடை வரும்படி குறைந்துபோய்விட்டதல்லவா? சர்க்காரும் நம்மைப்போல் ஒரு பெரிய குடும்பம்தானே? பார்க்கப்போனால் நமக்கு எப்படிச் செலவுக்கு வரும்படி போதாமல் தவிக்கிறோமோ, அந்தமாதிரிதான் அந்தப்பெரிய சர்க்கார் குடும்பமும். ஆனால் அவர்களுக்கு வரியோ, கடனோ வாங்கிப் போட்டுச் சரிக்கட்டச் சக்தியிருக்கிறது. செய்கிறார்கள். நமக்கு எங்கே வழி? கடன்தான் வாங்கவேண்டும். வாங்கினால் கொடுக்க முடிகிறதில்லை. அதுவும் நமக்கு இப்போது கொஞ்சத்திலே முடியாத காரியம். ஆகையினாலே நம் செலவைக் குறைத்துக்கொள்ள வேண்டியதுதான். கூழாகக் குடிக்கிறதை கஞ்சியாகக் குடிக்கவேணும். தொழில்கள் செய்து கொஞ்ச வரும்படியை ஜாஸ்திப் படுத்தவேணும். நான் முன்னே சொன்னமாதிரி, அதற்கு முதல் கிடையாது. செய்ய வழியும் தெரியாது. காட்டிக் கொடுப்பாருமில்லை. செய்த பிறகு விற்பனைக்குத் தற்கால முறைப்படி ஏற்பாடு செய்யச் சக்தியுமில்லை. என்னத்திற்கு இந்த தேசத்திலே பிறந்தோம், ஏன் இன்னும் பிழைத்து இருக்கிறோம், பிள்ளை குட்டிகளை விருத்தி பண்ணுகிறோம்? என்ன பிழைப்பு இது? இந்த அழகிலே இன்னும் வரி புது வரி!"

"என்ன தாத்தா! ரொம்ப நொந்து கொள்ளுகிறீர்களே. ஈசன் விட்ட வழி ஆகிறது. ஆனால் இந்த வரிகள் எல்லாம் பணக்காரர்களைத்தான் பாதிக்குமாம். நம்மைப்போல இருக்கிறவன் மோட்டார் வைத்துக்கொள்ளப் போகிறானா? எலெக்டிரிஸிடி உபயோகப்படுத்தப் போறானா? ரேடியோ-விசிறி-விளக்கு நமக்கு எதற்கு? பெரிய பெரிய வியாபாரம் செய்யப் போகிறோமா? நம்மை எல்லாம் இந்த வரிகள் ஒண்ணும் செய்யாதே. இதெல்லாம் அனுபவிக்கிற பணக்காரன் கொடுக்கட்டுமே".

"அதெப்படிடா? இந்த காலத்திலேதான் உலகத்தில் எந்த மூலையில் ஒன்று செய்தாலும், உலகமெங்கும் அதன் பலன்கள் பாதிக்கிறது என்று நன்றாகத் தெரிந்திருக்கிறதே. ஆகாசத்திலே கிரகங்கள் மாறினால்கூட நம் பூமியிலே அதன் பலாபலன் பாதிக்கிறது என்று ஜோஸ்யர்களும் வான சாஸ்திரிகளும் சொல்லுகிறார்கள். ஒரு ஊரிலேயோ, ஒரு தேசத்திலேயோ, பஞ்சம், கஷ்டம், என்றால் நம் ஊர்களிலும்கூட ஒரு அதிர்ச்சி கிளம்புகிறதே, தெரியவில்லையா? நன்றாகத் தெரிகிறது கொஞ்சம்; தெரியாமல் நடக்கிறது கொஞ்சம். நம் உணர்ச்சி எல்லாம் ஒரு எல்லைக்குள் அடங்கினதுதானே? நடக்கிறது நடந்துகொண்டுதானிருக்கிறது. நம் உணர்ச்சி எல்லைக்குள் அகப்பட்டதுதான் நமக்கு தெரி

கிறது நன்றாக. ரேடியோ அலைகள் என்கிறார்களே, எங்கேயோ சீமையிலே யாரோ பேசினால் இங்கே கேட்கிறதல்லவா இப்பொழுது? முன்காலத்திலே உன் காதுக்குக் கேட்டதோ? இல்லையல்லவா? அதனாலே, அந்தமாதிரி அலை எப்போதும்தானிருக்கிறது. ஆனால் நம்முடைய வெறும் காதுக்கு அதை அறிய சக்தி குறைவு. இப்போது யந்திர சாதனங்களைக்கொண்டு தெரிந்து கொள்கிறோம். இந்தமாதிரி தான் நம் மனதிலே எண்ணுகிற எண்ணம்கூட பிரபஞ்சமெல்லாம் பரவுகிறது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அதேமாதிரி, வரி என்றால் பணக்காரன் ஜாஸ்தி கொடுக்கவேண்டி வரும், அது தெரியும். நாம் தெரியாமலே கொடுக்கவேண்டியும் வரும் மறைமுகமாய். மொத்தத்தில் வரி எல்லாரையும் கொஞ்சம் நஞ்சம் பாதிக்கத்தான் செய்யுமென்று தோன்றுகிறது. எது எப்படியிருந்தாலும் இந்த வியாபார வரி என்கிறீர்களே, அது பணக்கார வியாபாரியை மட்டும் பாதிக்கிறதென்றால், அவன் என்ன பண்ணுவான் தெரியுமா? சின்ன வியாபாரிக்கிட்ட சரிக்கட்டுவான், சின்னவன் அவனுக்குச் சின்னவனிடம் பார்த்து விடுவான். அவன் நம்மிடம் வாங்கினாலும், கொடுத்தாலும் சரிப்படுத்திக் கொள்ளுவான். எப்படியாவது நாம் காலத்தைத் தள்ளவேண்டியது. மாட்டிக் கொண்டாகி விட்டது. அவஸ்தைப் பட்டுத்தான் தீரவேண்டும். தேச மேன்மைக்கு கள், சாராயம் போகிறதல்லவா? அதிலே வருகிற நஷ்டத்துக்கு நாம் கொஞ்சம் ஈடு கொடுக்கலாம்; அதனால் பரவாயில்லை. ஆனால் சர்க்காரில் அநேக இடத்திலே சிக்கனம் செய்யலாம். செய்தால் இவ்வளவு அவஸ்தைப் படவேண்டியதில்லை. அநேகம் உத்தியோகங்களைக் குறைக்கலாம். அதிகமாகச் செலவு செய்யும் இன்ஜினீயரிங் டிபார்ட்மெண்டின் செலவைக் குறைக்கலாம். பப்ளிக் ஒர்க்ஸ், டிஸ்டிரிக்ட் போர்டு, மைனர் இரிகேஷன், முனிஸிபல்—இந்த வேறு வேறு கிளைகளை ஒரே டிபார்ட்மெண்டாகச் செய்துவிடலாம். காசில்லாத நாளில் இவர்களுக்கெல்லாம் வேலை குறைச்சலாகத்தானே இருக்கும். முனிஸிபாலிடியில் பில் கலெக்டர்கள் என்று இருக்கிறார்களே, ஒரே வார்டுக்கு ஒரு பில் கலெக்டர் போதாதா? வீட்டு வரிக்கு ஒரு ஆள்; தண்ணீர் வரிக்கு இன்னொருவன்; எலெக்டிரிக் வரிக்கு இன்னொருவனும். நிஜமோ பொய்யோ தெரியாது. ஒருவனே பார்த்துக்கொள்ளலாம். முனிஸிபாலிடிக்கு கமிஷனர் என்று போட்டிருக்கார்களல்லவா, அவர் என்னத்துக்கு? அவர் இருந்தால் சேர்மன் என்பவர் எதற்காக? கௌன்ஸில் மெம்பர்கள் செய்கிறது என்ன? இப்பொழுது காங்கிரஸ்காரர்கள்தானே ராஜரீகம் நடத்துகிறது? முனிஸிபல் கௌன்ஸில் மேலும், சேர்மன் மேலும் நம்பிக்கையில்லாமலா கமிஷனர் என்று இருந்து நடத்திக்கொண்டு வருகிறார்? உள்ளே இருக்கிற நுட்பங்கள் எல்லாம் நமக்குத் தெரியாது. பட்டிக்காட்டான் மாதிரி நான்சொல்லுகிறேன். கமிஷனர் சம்பளம், அலவன்ஸ் எல்லாம் அதிகப்படி செலவு தானே? அப்படியே கமிஷனர் இருக்க வேண்டுமென்றால் யாராவது பெரிய பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கும் நல்ல அநுபவமுள்ளவர்களை நியமிக்கலாமே. செலவில்லாமல் அவர்களும் பயபக்தியோடு செய்யமாட்டார்களா? இந்த மாதிரியெல்லாம் எத்தனையோ விஷயங்களில் சிக்கனம் செய்து சரிப்படுத்தலாம்.”

“சரி. நீங்கள் ஊர் கதைகளெல்லாம் சொல்லிக்கொண்டு போகிறதில் என்ன லாபம்? நாமும் நம்முடைய ஊரும் முன்னுக்கு வந்து பிழைக்கிற வழியிருந்தால் சொல்லுங்கள், தாத்தா. கூழாக் குடிக்கிறதை கஞ்சியாகக் குடிக்கவேணும். இன்னும் கொஞ்சம் கஷ்டமும் செலவும் வந்தால் இன்னும் கொஞ்சம் உப்பும் தண்ணியும் விடவேணும். அப்படிச் செய்தால்கூட சரிக்கட்ட முடியவில்லையே.”

“இப்படி அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறதில் லாபமில்லை. நம் ஊர் மாதிரி தான் இன்னம் அநேக ஊர்களும். குடும்பங்கள் ஒன்றாய்ச் சேர்ந்துதானே கிராமம்? கிராமங்கள் அநேகம் தேசமாகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் வரவு செலவு திருப்தியாய்விட்டதானால் தேசமே முன்னேறி விட்டது என்று சொல்லலாம்.”

பத்ராசலம்

(ஸ்ரீ குபீல் சுந்தரேசன்)

நிஜாம் ராஜ்யத்தின் ஒரு கோடியில் கோதாவரி நதிக்கரையின் வடபாகத்தில் பத்ராசலம் என்ற ஒரு சிறிய ஊரானது அமைந்திருக்கிறது. இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான யாத்ரீகர்களும், ஸ்ரீராம பக்தர்களும், வருஷந்தோறும் இந்த க்ஷேத்திரத்திற்குப் போகின்றனர். சில வருஷங்கள் முன்பு வரையில் இந்த க்ஷேத்திரத்திற்கு வண்டி, மோட்டார் ஒன்றும் போகாததால் யாத்ரீகர்கள் மிகவும் சிரமப்பட்டனர். ஆனால் இப்பொழுது மோட்டார் ஒன்று ஓடுவதால் அவர்களுக்கு வெகுவாக சிரமம் குறைந்திருக்கிறது.

ஸ்ரீராமர் பிறந்த தினத்தைக் குறித்து இங்கு கொண்டாடப்படும் உத்ஸவம் மற்ற எல்லா உத்ஸவங்களைக் காட்டிலும் சிறந்தது. ஸ்ரீராம சீதா லக்ஷ்மண விக்ரஹங்களை கோதாவரி [illegible] ஸ்நானம் செய்வித்து, தூய ஆடைகள் உடுத்தி, அழகிய ஆபரணங்கள் அணிவித்து, கல்யாண மண்டபத்திற்கு எடுத்துச் செல்வார்கள். கல்யாண மண்டபம் முழுவதும் ஒரே கூட்டமாய் இருக்கும். ஹைதராபாத் கவர்ன்மெண்டார் ஒவ்வொரு வருஷமும் முப்பதாயிரம் ரூபாய் நன்கொடை அளிக்கிறார்கள்.

இனி பத்ராசலத்தின் பெயர்ச் சிறப்பைக் கவனிக்கலாம். ஸ்ரீராமர் வன சஞ்சாரம் செய்தபொழுது இவ்விடத்திற்கு வர நேர்ந்தது. அப்பொழுது அகஸ்திய முனிவரைச் சந்தித்தார். அம்முனிவர் விருப்பப்படி கோதாவரி நதிக்கரையில் பஞ்சவடி என்ற இடத்தில் ராமர் ஒரு பர்ணசாலையை அமைத்துக் கொண்டார். மற்றும் இவ்விடத்தில்தான் ராமர் தன் அன்பிற்குரிய சீதையைப் பறிகொடுத்தார். ஆகையால் பத்ராசலம் மிகுந்த சிறப்புடையது.

பத்ராசலத்திற்கு மூன்றுமைல் தூரத்தில் சிறிய ஓடையொன்று ஓடுகிறது. அதில் ஸ்நானம் செய்தால் செய்த பாவங்களனைத்தும் நீங்கும் என்பது ஒரு ஐதீகம். இந்த ஓடையானது ராமருடைய வில்லினால் பூமியில் துளைக்கப்பட்ட ஒரு இடுக்கினின்றும் உற்பத்தியாகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதைப்பற்றி வேறொரு சாரார் வேறொரு விதமாகக் கூறுகின்றனர். அரக்கர்களை ஒழிப்பதற்காக ஆதிசேஷன் இவ்விடத்தில் நெருப்பை ஏற்படுத்தினாரென்றும், அதுவே இப்பொழுது காணப்படும் ஓடையாகத் தோற்றம் அளிக்கிறது என்றும் கூறுகிறார்கள். ஆகையால் நாம் எதை நம்பினாலும் நம்பாவிட்டாலும் அவ்வோடை மட்டும் புனிதமானது என்பதை அறிகிறோம்.

ராம பக்தரான ராமதாஸ் சரித்திரத்துடன், பத்ராசலத்தின் சரித்திரமும் இணைக்கப்பட்டிருக்கிறது. ராமதாஸ் தாசில்தாராக இருந்தபொழுது கவர்ன்மெண்டின் ஆறு லக்ஷ ரூபாயைச் செலவு செய்து அக்கோவிலைக் கட்டினார். அரசன் அப் பணத்தைக் கொடுப்பார் என்பது அவருடைய எண்ணம். ஆனால் அரசனோ அவர் அவ்விதம் பணத்தைச் செலவு செய்ததற்காகக் கோபித்துக் கொண்டு ராமதாஸைக் கைதியாக்கி அவருக்கு மரணதண்டனையும் விதித்தான். தம் பக்தனுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு ராமரும் சீதையும், அரசனுக்கு அத்தொகையைச் செலுத்தி ராமதாஸைக் காப்பாற்றினர். அதன் பிறகு அரசனுக்கு ஸ்ரீராமர் தரிசனம் அளித்து, அவனையும் ராமதாஸையும் ஸ்வர்க்க பதவி அடையும்படி அருளினர்.

இத்தகைய சரித்திர மகிமை வாய்ந்த பத்ராசலம் வருஷந்தோறும் ஆயிரக் கணக்கான யாத்ரீகர்களை தன்னகத்தே இழுப்பது ஒரு அதிசயம் அன்று. பத்ராசலம் என்ற பெயர் ஸ்ரீராமர் என்ற பெயருடன் ஐக்கியமாய் இருக்கிறது.

எமாந்தது யார்?

(ஸ்ரீமதி கமலா பத்மனாபன்)

“கோமளம்! அத்திம்பேர் கடிதம் எழுதியிருக்கிறார். அக்காவும் அத்திம்பேரும் குழந்தைகளுடன் இன்றிரவு புறப்பட்டு நாளையதினம் மைசூர் வரப் போகிறார்களாம். வீட்டில் சாமான்கள் எல்லாம் இருக்கின்றனவா? ஏதாவது வேண்டுமானால் இப்பொழுதே ஒரு பட்டி எழுதிக் கொடு. எல்லாவற்றையும் வாங்கிப் போடுகிறேன். அவர்கள் இரண்டு நாள் வந்திருக்கும்பொழுது, அது இல்லை இது இல்லை என்று, பஞ்சப் பாட்டுப் பாடி சமயத்தில் மூக்கை அறுக்காதே” என்றான் ஸம்பத்.

“அக்காவுமாச்சு, அத்திம்பேருமாச்சு! எனக்குப் பத்து நாட்களாக கட்டோடெ உடம்பு தள்ளவே இல்லை. என்னமோ தீராதே என்று உங்களுக்கு இரண்டு வேளை பொங்கிப் போட்டு என் பொரியைத் தொலைக்கிறேன். அவர்கள் வந்தால் என்னமோ, இரண்டு நாளோ மூன்று நாளோ இருந்துவிட்டு போய்விடும் ஆசாமிகளா? மாதக்கணக்காய் ‘டிகாணா’ போடமாட்டார்களா? உண்மையைச் சொல்லிவிட்டேன். என்னால் அவாளுக்கெல்லாம் காரியம் செய்து சிரமப்பட முடியவே முடியாது. எனக்கு உடம்பே சரியாக இல்லையென்றும், நாட்டு வைத்தியனிடம் கடும் பத்தியத்தில் நான் மருந்து சாப்பிட்டு வருவதாயும், நீங்கள் மாத்திரம் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருப்பதாயும், விவரமாய் ஒரு கடிதத்தை எழுதிப்போடுங்கள். அவர்கள் இன்றிரவு புறப்படாமலிருப்பதற்கு ஒரு தந்தியையும் இப்பொழுதே அடித்து விடுங்கள்” என்று தன் கணவனுக்குப் பதிலளித்து கோமளம் ரொம்ப ஆயாசமடைந்தவள்போல தொப்பென்று சாய் நாற்காலியில் சாய்ந்தாள்.

ஸம்பத் தலையைச் சொரிந்துகொண்டு அசடுவழிய அம்மாள் பேச்சுக்கு வேறு “அப்பீல்” கிடையாதோ என்று கேட்கும் பாவனையாக, கெஞ்சிய பார்வையுடன் கோமளத்தை நோக்கினான்.

கோமளம் முகத்தைச் சுளித்துக் கொண்டு, நாற்காலியில் இன்னும் சற்று வசதியாகப் படுத்துக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டாள்.

ஸம்பத் “ஹ்ஊம்” என்று ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு சிறிதுநேரம் ஏதோ ஆலோசித்த வண்ணம் கூடத்தில் அப்படியுமிப்படியுமாக உலாத்தினான்.

பிறகு “சரி, ஒரு தந்தி கொடுத்து விடுகிறேன். கடிதம் வேண்டுமானால் நாளைக்கு எழுதுகிறேன். உங்கள் அத்திம்பேர் விலாஸமென்ன? நம்பர் 78, பவழக்காரத் தெருதானே, கோமளம்?” என்று வினவினான்.

உடனே கோமளம் வாரிச் சுருட்டிக் கொண்டு [illegible]ஆசனத்திலிருந்து எழுந்து “யாரு? பட்டணத்திலிருந்து எங்க ஜெயாக்காவும் அத்திம்பேருமா வரப்போகிறார்கள்? பெங்களூரிலிருந்து உங்களக்காவும் அத்திம்பேருந்தான் வருகிறார்களாக்கும் என்றல்லவா நினைத்தேன். தந்தியும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். என்றைக்கும் வராதவர்கள் வருகிறார்களே! இன்று மொட்டை மாடியில் அந்த வெயிலில் உட்கார்ந்து கொண்டு வடாமிட்டுக்கொண்டிருந்ததினால் உடம்புக்கு சற்று அலுப்பாக இருந்தது. அந்த சிரமத்தினால்தான் உடம்பு தள்ளவே இல்லையென்று சொன்னேன். இதோ சாமான்களுக்குப் பட்டி எழுதிக் கொடுக்கிறேன். இப்பொழுதே வாங்கிக்கொண்டு வந்துவிடுங்கள்” என்றாள்.

“பார்த்தாயா கோமளம்? உன்னிடம் பக்ஷபாத ஸ்வபாவம் ரொம்ப ஜாஸ்தி. என்னுடைய அக்கா அத்திம்பேர் வந்தால் மாத்திரம் உனக்கு அவர்களை வரவேற்று உபசரிக்கக் கசப்பாக இருக்கிறதாக்கும்

இருக்கட்டும்'' என்று சம்பத் மனத் தாங்கலுடன் பேசினான்.

கோமளம் புன்முறுவலுடன் தன் கணவன் சமீபம் போய் நின்று கொஞ்சலாக, "போங்கோன்னா. உங்களுக்கு 'துசு'க் கென்றால் மூக்குக்குமேல் கோபம் வந்து விடுகிறது. உங்களுடைய அக்கா அத்திம்பேர் வந்தால் மாத்திரம் நான் அவர்களை சரிவர நடத்தி உபசரிக்காமல் இருந்து விடுவேனா? அதான் சொன்னேனே, உடம்பு அலுப்பினால் ஏதோ அப்படி உளறினேன் என்று. நிஜமாக உங்கள் அக்கா அத்திம்பேர் இப்பொழுது வருவதாகக் கடிதம் எழுதியிருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு அவர்களை வரவேற்று உபசரிப்பது ஒன்றும் பிரமாதமல்ல. உங்களக்கா, அத்திம்பேர், எங்களக்கா, அத்திம்பேர் எல்லோரும் எனக்கு ஒரே மாதிரிதான். நான் எவ்வளவோ வித்தியாசமில்லாமல் நடந்து கொண்ட போதிலுங் கூட உங்கள் மனதிற்கு (இங்கு குரல் கொஞ்சம் கம்முகிறது) திருப்தி உண்டாவதில்லை. உங்களைச் சொல்லி என்ன பயன்? ... இந்த வீட்டு வாசல் மிதிக்... வேளை அப்படி'' என்று சம்பத் எதிர் பாராத ... மளம் கண்ணீர் மடையைத் திறந்தாள்.

சம்பத் கோமளத்தை சமாதானம் செய்வதற்குக் கிட்டத் தட்ட ஒரு மணி நேரமாயிற்று. இவன் நல்ல வார்த்தைகள் சொல்லி அவளைத் தேற்றத் தேற்ற அவளுடைய அழுகை அதிகமாயிற்றே தவிர குறைந்தபாட்டைக் காணோம். கடைசியாக கோமளம் வழிக்கு வந்ததும், அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு, சம்பத் சாமான்கள் வாங்கி வருவதற்காக கோமளம் கொடுத்த ஜாபிதாவை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான்.

கோமளம், தான் வெகு எளிதில் தன் கணவனை ஏமாற்றிவிட்டதற்காக தன்னையே புகழ்ந்துகொண்டாள். தன் அக்கா அத்திம்பேர் முதலியவர்களுக்காக பிரத்தியேகமாக ஒரு அறையைக் காலி செய்து சுத்தப் படுத்தினாள். "அவர்கள் வந்திருக்கும்பொழுது ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வித டிபன் செய்யவேண்டும். ஊரெல்லாம் சுற்றிக் காண்பிக்க அவர்களுக்காக ஒரு டாக்ஸி ஏற்பாடு செய்தால் தான் தேவலை. அக்காவுக்கு மைசூர் ஜார்ஜெட்டில் ஒரு புடவையும் குழந்தைகளுக்கு பாவாடை சொக்காயும் வாங்கிக் கொடுக்கவேண்டும்'' என்று பலவாறு எண்ணமிட்டாள்.

பொழுது விடிந்தது. குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமணி நேரம் முன்னதாகவே சம்பத்தை ரயிலடிக்கு ஓட்டினாள்.

கோமளம் உள்ளுக்கும் வாசலுக்கும் பன்முறை நடந்தாள். அவள் கடிகாரத்தைச் சபித்தாள். கடைசியில் தெருவில் "டாங்கா'' வரும் சப்தம் கேட்டவுடன் அவள் பரபரப்புடன் வீதிக் கதவோரமாக புன்சிரிப்புத் தவழ வந்து நின்றாள். தெருக்கோடியில் இரண்டு வண்டிகள் வந்து கொண்டிருந்தன. வண்டிகள் வீட்டு வாசலில் வந்து நின்றதும் இரண்டாவது வண்டியிலிருந்து கையில் வெள்ளிக் கூஜாவுடன் இறங்கியது யார்? அவள்தான். கோமளத்தின் நாத்தனார் பங்கஜம்!

ஐயோ பரிதாபம்! கோமளத்தின் புன்சிரிப்பெல்லாம் ஒரு நொடியில் பறந்தோடி ஒளிந்தது. அவளுடைய மனக் கோட்டையில் இடி விழுந்தது. சம்பத் தன்னை இவ்விதம் ஏமாற்றியதற்காக அவனை அக்கணமே தன் பார்வையினால் சுட்டு விடலாமா என்று நினைப்பவள் போல் சம்பத்தை நோக்கினாள். ஆனால் சம்பத் அவள் பக்கம் திரும்பினால் தானே! அவன் ஒன்றும் அறியாதவன் போல் தன் அக்காவின் குழந்தைகளை ஒவ்வொன்றாக வண்டியிலிருந்து இறக்கிக்கொண்டிருந்தான். ஏமாந்தது யார்?

பிறகு என்னவாயிற்றென்பதை அறிய வாசகர்கள் ஆவலாக இருப்பார்கள். ஆனால், அதெல்லாம் புருஷன் மனைவி சமாசாரம். நாம் அதில் தலையிடுவது நன்றாக இராது. தாம்பத்திய வாழ்க்கையில் ஒரு சமயம் சல்லாபம், மற்றொரு சமயம் சச்சரவு, இரண்டும் இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தானே!

மாலதி

(ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்)

மோட்டார் வண்டி சங்கரன் வீட்டு வாயிலில் வந்து நின்றது. மோட்டார் ஹார்ன் சப்தத்தைச் செவியுற்ற வீட்டு எஜமானி பத்மா வந்து வாயிலில் புறக் கதவைத் திறந்தாள். அவளுடைய கையில் மோட்டார் டிரைவர் ஓர் கவரைக் கொடுத்தான். உரைமேல் எழுதியிருக்கும் மேல்விலாசத்தை வாசித்துப்பார்த்த பத்மா, தனக்குதான் கடிதம் வந்திருக்கிறதென்பதை அறிந்து உரையைக் கிழித்து கடிதத்தைப் படித்தாள். அவள் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. உடனே வீட்டினுள் சென்று புறப்பட ஆயத்தம் செய்யலானாள். சேவகன் குப்பனை அழைத்து, தான் ஏதோ அவசர ஜோலியாக வெளியே செல்லுவதாகவும், ஆறு மணிக்குள் திரும்பி வந்துவிடுவதாகவும், வீட்டை ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், கட்டளையிட்டு வீட்டை அவனிடம் ஒப்பித்துவிட்டு, மோட்டாரில் ஏறிச் சென்றுவிட்டாள். தன் எஜமானியம்மாள் என்றுமில்லாத ஆனந்தத்துடன் விளங்குவதைக்கண்டு குப்பனுக்கே மிகவும் ஆச்சரிய முண்டாயிற்று.

சங்கரன் இன்றைய தினம் ஐந்து மணிக்கு பதினைந்து நிமிஷங்கள் முன்னதாகவே ஆபிஸிலிருந்து வீடுவந்து சேர்ந்தான். அவன் இன்று கிளப்பிற்கு செல்லாமல் வீட்டிற்கு நேராக வந்த காரணம் இன்று ஆபீஸில் தலைக்குமேல் வேலை. ஆதலால் அவன் சிரம மிகுதியால் அறுவறுப்புடன் வீடுவந்து சேர்ந்தான். வீட்டில் எங்கும் பத்மாவும் தென்படாமலிருப்பதைக் கண்டு அவனுக்குக் கோபமுண்டாயிற்று. நாற்காலியில் சாய்ந்தவண்ணம் "டே, குப்பா, குப்பா" என்று கர்ஜித்தான். குப்பனும் ஓடிவந்து சங்கரன் கழற்றி எறிந்த ஜோடுகளை ஒரு புறம் எடுத்து வைத்தான். யஜமானன் மிகவும் களைத்திருப்பதையும் மிகவும் கோபத்துடனிருப்பதையும் கண்ட குப்பன், பயபக்தியுடன் கைகட்டிக்கொண்டு ஒதுங்கி நின்றான்.

சங்கரன்—"அம்மாவை கூப்பிடு"

குப்பன்—"அம்மா, வூட்டுலே, இல்லீங்க யஜமான்."

சங்கரன—"பின்னே எங்கடா போய் விட்டாள்?"

குப்பன்—"நாராயண அய்யா வூட்டு மோட்டாரு வந்துச்சுங்கோ. அதிலே ஏறிக்கிட்டு போனாங்க."

சங்கரன் "சரி, தொலைந்து போடா கழுதை" என்று அவனை அதட்டி அனுப்பிவிட்டு, அவன் காலருகில் ஓர் காகிதம் கசங்கி விழுந்திருப்பதைக் கண்டு, அதை தற்செயலாக எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் பின் வருமாறு ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

"பிரியமுள்ள பத்மாவிற்கு,

மாலதி வெளிப்படுகிறாள். உடனே புறப்பட்டு வரவும். மற்ற விஷயம் நேரில்.

இப்படிக்கு,

அன்பார்ந்த அத்தான் 'நாராயணன்'"

உடனே சங்கரன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "கிராதகி, கிராதகி, கடைசியிலும் உன் கெட்ட நடத்தையைக் கண்டு பிடித்துவிட்டேண்டி! இப்பொழுது இரண்டு மாதங்களாக நீங்களிருவரும் உறவுகொண்டாடுவதை நான் உணரவில்லை என்று நினைத்திருக்கிறாய்? சீ, சண்டாளி, எப்பொழுதும் அவன் வந்தால் மூவருமாகவல்லவோ உல்லாசமாக பேசிக்கொண்டிருப்பது வழக்கம்? ஆனால் இந்த இரண்டு மாதங்களாக நீ காரியம் செய்யுமிடத்திற்கே சென்று தனித்து இருவரும் 'குசு, குசு' வென்று பேசாமல் திரும்புவதே கிடையாதே! இவ்வளவு தூரம் விட்டது என் தப்பிதம். அந்த சனியன் நாராயணன் பெண்டாட்டி எங்காகிலும் வெளியே செல்ல மாட்டாளா என்று காத்திருந்து, காரை இவளுக்கு அனுப்பி இருக்கிறான். இருக்கட்டும், இவர்களு

டைய துர்நடத்தைக்குத் தகுந்த சிக்ஷை யளிக்கிறேன். இவ்விதமே அவனும் மத்தியானபொழுதில் இவ்விடம் வருகிருனே என்னமோ, யாருக்கு தெரியும்? இப்பொழுதே இவனை உடனே வந்து அழைத்து செல்லும்படி இவளது தகப்பனுக்குக் கொரு தந்தி அடித்து விடுகிறேன்" என்று பலவாராக யோஜித்த வண்ணம் மேஜை யருகில் சென்று தந்தியையும் எழுதி குப்பனிடம் கொடுத்து அவனை தந்தி ஆபீஸிற்கும் ஓட்டிவிட்டான்.

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் பத்மாவும் காரில் வந்து இறங்கினுள். அதற்குள் சங்கரன் வீட்டிற்கு வந்துவிட்டிருப்பதையும், அவனது முகத் தோற்றத்தையும் பார்த்து பத்மா திகைத்து போனுள். ஏற்கனவே சந்தோஷத்தினுல் மலர்ந்திருந்த அவளது வதனம் சட்டென்று சிறுத்தது. அவள் கையிலொரு பார்சலைத் தாங்கிய வண்ணம், குனிந்தவாறு நேராக சமயலறைக்குச் சென்றுள்.

சிறிதுநேரம் கழித்து கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, மெதுவாக சங்கரனருகில் வந்து நின்றுகொண்டு, கொஞ்சலாக "என், ஒருமாதிரி இருக்கிரேளே? உடம்புக்கு ஒன்றுமில்லையே? டென்னீஸ் ஆடக்கூட போகவில்லை போலிருக்கே?" என்று வினவினுள்.

சங்கரன் முகத்தைச்சுளித்துக்கொண்டு "எட்டி நில், கழுதை! இனிமேல் உனக்கும் எனக்கும் ஓர்வித சம்பந்தமும் இல்லை" என்று சீறினன்.

பத்மா தழுதழுத்த குரலில் "என்மேல் என் கோபம்? நான் என்ன குற்றம் செய்துவிட்டேன், இப்படி எரிந்து விழுறேள்.........." என்றுள்.

"முழு பூஷணிக்காயை ஒரு பருக்கை சோத்தில் மறைக்க பார்க்கிருபா? நீ உன் அத்தானேடு நடந்துகொள்ளும் விதத்தை நானும் இரண்டு மாதகாலமாக கவனித்து வருகிறேன். இந்தக் கடிதமே அதற்கு அத்தாக்ஷி" என்று சொல்லி சங்கரன் அந்தக் கடிதத்தை அவளது முகத்தின் மேல் விட்டெறிந்தான்.

"என்? இதில் என்ன தவருக இருக்கிறது" என்று கேட்டாள் பத்மா.

"தவரு! உன் அத்தாமன்னி, வீட்டிலிருந்து வெளியே போன பிறகு நீ இங்கேயிருந்து எதற்காகப் போகிருய்?"

பத்மா குபீலென்று சிரித்துவிட்டாள்.

"ஈச்வரா! அத்தாமன்னியின் பெயரை என் கதைக்கு வைத்ததே பிசகாய்போச்சு! பேஷ்! கெட்ட எண்ணத்தைப் பாரு, கெட்ட எண்ணத்தை"

"என்னடி சொல்றே! எனக்கு ஒன்றுமே புரியல்லியே" என்று சங்கரன் திகைப்புடன் கேட்டான்.

"நான் ஒழிந்த நேரங்களில் "மாலதி" என்ற பெயரில் ஒரு நாவல் எழுதி முடித்தேன். அதை உங்களுக்குக்-காண்பிக்க வெட்கப்பட்டு அத்தாமன்னியிடம் கொடுத்தேன். அவள் அதை வாசித்து பார்த்துவிட்டு, மிகவும் நன்ருக விருக்கிறதென்றும் அத்தானிடம் சொல்லி அவனையும வாசிக்க சொல்லிக் கொடுத்தாளாம். அதை படித்த அத்தான் அதை தன் அச்சுக்கூடத்திலேயே கட்டாயம் பிரசுரிக்க அனுமதியளிக்க வேண்டுமென்று என்னை வற்புறுத்தினுன். உங்களுக்கு ஆச்சரிய மூட்ட வெண்ணி, புத்தகம் பிரசுரமானபின் அதை உங்களிடம் கொடுக்க வேண்டுமென்று எனக்கு ஆசையாக விருந்தது. அதனுல்தான் புத்தகம் எவ்வித மிருக்கவேண்டும், அதற்கு யாரிடம் சிறப்புரை எழுதவைப்பது, முதலிய விஷயங்களைப்பற்றி நானும் அத்தானும் அப்பப்பொழுது தனித்துப் பேசினேம். இன்று சாயந்திரம்தான் புத்தகம் பிரசுரமாகி முடிந்ததால், அதைத்தான் அத்தான் "மாலதி வெளிப்படுகிறுள்" என்று இங்கிலீஷில் சுருக்கமாக 'சிட்' (Chit) எழுதி அனுப்பி இருந்தான்" என்று சொல்லிக்கொண்டே சமயலறைக்குச்சென்று அந்தப்பார்சலைக் கொண்டு வந்து அவிழ்த்தாள். அதில் நான்கு அழகிய புத்தகங்கள் காட்சியளித்தன. பத்மா அதிலொன்றை எடுத்து அன்புடன் சங்கரனிடம் கொடுத்தாள்.

சங்கரன் புத்தகத்தை வாங்கிப் பார்த்தான். அவனுக்கு வாய் பேச வழியில்லை.

(23-ம் பக்கம் பார்க்க)

விமோசனம் இல்லையா?

(ஸ்ரீ பே. சு. ஜகந்நாதன்)

என் வாழ்வே ஒரு துர்ப்பாக்கியவதியின் கதைதான். நான் இந்தப் பூமியை முதன் முதலில் கண்டபொழுதே என்னை விட்டு விட்டு என் தாயார் பரலோகம் சென்று விட்டாள்.

பெண் குழந்தைகளுக்கு உரியவள், பிரியமானவள் தாயார். யாருக்கு என்னிடம் எவ்வளவு அன்பு இருந்தாலும், அது என் தாயுடையதுபோல ஆகுமா?

* * *

வருஷங்கள் செல்லச் செல்ல என் உடலழகும் விருத்தியடைந்து வந்தது. உண்மையைச் சொல்வதில் வெட்கமென்ன? நான் மிக அழகாக இருந்தேன். என் தோழிகளும் அப்படித்தான் சொன்னார்கள். "அடியே சுசீலா, உன் 'ஆம்படையான்' கொடுத்து வைத்தவனடீ!" என்று கேலி செய்தார்கள்.

தலையை வாரிப் பின்னிக்கொண்டு, அதில் ஒரு ரோஜாப் பூவைச் சொருகி வேன். முகத்தை நன்றாகக் கழுவி ஒரு குங்குமப் பொட்டையும் வைத்துக் கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டேனேயாகில், "ராணி, கிளம்பிவிட்டாயா?" என்று சிரிப்பார் என் தந்தை.

பழைய ஞாபகங்களில்—அதாவது நான் யுவதியாக இருந்த காலத்தில் நடந்த— இன்னும் சில சம்பவங்களை நினைத்துக் கொண்டால் எனக்கு இப்பொழுதும் சிரிப்பு வருகிறது. அப்பொழுது என் வீட்டிற்கு எதிர்த்த வீட்டுப் பையன் 'நான் எப்பொழுது வெளியே வரப்போகிறேன்' என்று வாசலிலேயே உட்கார்ந்திருப்பான்.

* * *

இப்போது கண்ணாடி யருகே நின்று கொண்டு, நான் தலையை வாரி, பின்னிக் கொள்ள முடியாது. அழகு படுத்திக் கொள்ளக் கூடாது. இனி ரோஜாப் புஷ்பத்திற்கும் எனக்கும் உறவு கிடையாது.

தற்பொழுது என்னுடன் விளையாடிய தோழிகள், குஞ்சும் குழந்தையுமாக குதூகலத்துடன் வசித்து வருவதை என் கண்களால் பார்க்கிறேன். ஆனால் அப்பொழுது "ராணி, ராஜாத்தி" என்று பேசிய அவர்கள் இப்பொழுது என்னைக் கண்டு 'சூள்' கொட்டுகிறார்கள்.

என் தகப்பனார் கூட "தரித்திரப் பிண்டம், சாகமாட்டேனென்கிறதே" என்று சொல்லுகிறாரே!

வாழ்நாள் முழுவதும் இப்படி உதாசீனம் செய்யப்பட்டேதான் நான் சாக வேண்டுமா?

ஒரு நாள் என் வீட்டில் குடியிருப்பவள், எங்கேயோ நடனக் கச்சேரி என்று என்னை வரும்படி கூப்பிட்டாள். "அம்மா, நான் வரவில்லை" என்றேன். "முடியவே முடியாது. உனக்கும் என் வயதுதானே, நீயும் மனித ஜன்மந்தான். அதற்குள் உலகம் வெறுத்து விடாது" என்று வற்புறுத்தி இழுத்துக்கொண்டு போனாள்.

நான் பூர்வாச்ரமத்தில் இருந்தபொழுது பல தடவைகள் இது போன்ற சம்பவங்களுக்குப் போயிருக்கிறேன். அப்பொழுது என்னைப் பார்த்ததுமே எல்லோரும் விலகிக்கொண்டு வழி விடுவார்கள். பல தடவைகள் இடம் அகப்படாமல் நான் நின்றுகொண்டிருந்தபொழுது, பலர் தங்களுடைய இடத்தையும் எனக்குத் தந்திருக்கிறார்கள்.

அன்று என் சிநேகிதியுடன் கச்சேரி நடக்குமிடத்திற்குள் நான் நுழைந்ததும், சபையில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. எல்லோரும் என்னை வெறித்துப் பார்த்தார்கள். நான் கச்சேரிக்கு வரலாமோ? ஆம், நான் கச்சேரிக்கு வந்தது குற்றம்தான். என் உடல் குன்றி, இப்பூமியே வெடித்து என்னை விழுங்கி விடாதா என்று துடித்தேன். அழுகை குமுறிக் கொண்டு வரவே, "சீ, இந்தப் பாழாப் போன ஜன்மத்திற்கு சந்தோஷம் கூட வேண்டுமா?" என்று வீட்டிற்கு வந்துவிட்டேன்.

ஆ! என்ன மாறுதல்! என் பார்வைக்காக பழி கிடந்த உலகம் என்னைப்பார்த்து மிரளுகின்றது. அதற்கு நான் செய்த தப்பிதமென்ன? ஆமாம் நான் ஒரு விதவை.

பூர்வ கதை

கண்டிராக்டர் லம்போதர முதலியார் மனைவியை இழந்தவர். தன் தாயார் தேவானையம்மாளுடனும் பிள்ளை தணிகை வேலனுடனும், மருமகள் புனிதவதியுடனும் வசித்து வந்தார். புனிதவதி சிறுவயதில் பெற்றோரை இழந்தபடியால் முதலியார் அவளைக் காப்பாற்றும்படி ஆயிற்று. புனிதவதி தணிகைவேலனைக் காதலித்தாள். ஆனால் தணிகைவேலனுக்கும் புனிதவதியின் வகுப்புத் தோழியான சிவகாமிக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

புனிதம் தாங்க முடியாத துக்கம் அடைந்தாள். தன்னை தணிகு நன்றாக அறிந்து கொள்ளாமல் இப்படிக் கல்யாணத்திற்குச் [illegible] சம்மதி[illegible] என்று மனம் புழுங்கினாள். வேதனை தாங்காமல் அன்றிரவு தற்கொலை செய்து கொள்வதென்று தீர்மானித்தாள். ஆனால் சிறிது நாழிக்கெல்லாம் அவள் முன் செய்த தீர்மானம் மறைந்தது. துயரம் வருவதெல்லாம் ஆசையால்; ஆசையால் ஆசையைக் களைந்துவிட்டால் துயரப்படவேண்டியதில்லை யல்லவா?...என்று கேட்டுக் கொண்டாள். ஆகவே அவள் பற்றைத்துறந்த ஓர் சந்நியாசினியாகக் காலங்கழிக்கத் துணிந்தாள்,

தணிகுவக்கும் சிவகாமிக்கும் கல்யாணம் நடந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. புனிதம் மட்டும் கல்யாணம் செய்து கொள்ளாமல் துறவி வாழ்வு நடத்தினாள். தேவானையம்மாளும் சிவகாமியின் தகப்பனார் சம்பந்த முதலியாரும், எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் தீர்மானத்தை அசைக்க முடியவில்லை.

இப்படி அவள் ஐந்து வருஷங்கள் காலந் தள்ளி விட்டாள்.

ஒரு நாள் சிவகாமிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அதனால் அவள் மிகவும் இளைத்து படுக்கையோடு படுக்கையாகக் கிடந்தாள். சிவகாமியின் தேகநிலை கவலைக்கிடமாயிற்று. முதலியார் எவ்வளவோ சிறந்த வைத்தியம் செய்துங்கூட கடைசியில் சிவகாமி உயிர் நீத்தாள்.

இதனால் தேவானையம்மாளுக்கு மூளை குழம்பிப் பயித்தியம் பிடித்தது. தணிகைவேலன் தந்தையைப் போல மனைவியற்றவனானன். அடிக்கடி சிவகாமியின் ஞாபகம் வந்து அவன் மனதைக் குத்தி வேதனை செய்யும். சிவகாமியின் எழில் முகம் அவன் உள்ளத்தே தோன்றி மறையும். சிவகாமி தன்னைப் பார்த்துச்சிரித்து ஏதோ கேள்வி கேட்பதுபோல அவன் கற்பனை உள்ளத்தில் ஓர் பிம்பம் தோன்றும்.

திடீரென்று தணிகை வேலனின் மனதில் ஓர் புரட்சி உண்டாயிற்று. புனிதத்தின் பேரில் அவனுக்கு ஓர் நவமான உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் தன் மனதில் ஏற்பட்ட காதலை அவளிடம் எப்படித் தெரிவிப்பது என்று சங்கோஜப்பட்டான். ஒரு நாள் இரவு தைர்யத்தைக் கைவிடாமல் புனிதம் படுத்திருந்த இடத்திற்குச் சென்று வாய்திறந்து பேச முயன்றான். ஆனால் பேச நாவெழாமல் நிலைகுலைந்து நின்றான்.

(இனிமேல் படிக்கலாம்)

12
விமோசனம்

புனிதத்தின் முகத்தில் நாணத்துடன் கூடிய இளநகை தோன்றிற்று. இஷ்ட தேவதையைப் பிரார்த்திக்கும் பரம பக்தன்போல் தணிகு அவள் எதிரில் நின்றான்.

புனிதமும் எழுந்தாள். "என்ன தணிகு? ஏன் தயங்குகிறாய்" என்ற வார்த்தைகள், அன்பும் ஆவலும் கலந்த குரலில் அவள் வாயினின்று எழுந்தன.

“புனிதம், உன் எல்லையற்ற கருணை மழையை என்மேலும் கொஞ்சம் பொழியக்கூடாதா? புனிதம், இதுவரையில் என்னையே நான் தெரிந்துகொள்ளவில்லை. கடந்த பல மாதங்களாய் உன்னையே நினைத்து நினைத்து உருகியிருக்கிறேன். ஆனால் உன்னிடம் சொல்ல எனக்குத் தைரியமில்லை. நீ சாக்ஷாத் தேவிபோலிருக்கிறாய். உன்னிடம் துணிந்து நான் எப்படிக் காதற் பிச்சை கேட்பேன்? வாழ்க்கையின் துயரத்தின் முடிவில், துயரத்தின் இருளில் உன் ஒளியைக் கண்டேன். ஆனால் கண் திறந்து பார்ப்பதற்கு உரிய தைரியம் எனக்கில்லை. உன் அருகில் நெருங்கவும் நான் அருகமற்றவன். உன் ஒப்பற்ற தியாகத்தினால் நீ பிரகாசிக்கிறாய்.........‘என்னை மணந்து கொள்’ என்று நான் எப்படிக் கேட்பது என்றே தயங்கினேன். எத்தனை நாள் மூடிவைக்க முடியும்? ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள்—என்னையும் மீறி எந்த முறையில் வெளி வந்துவிடுமோ என்று கூட பயந்தேன்—என்னை நீ கோழை என்றாலும் சரி. மனோபல மற்றவன் என்றாலும் சரி. இகழ்ந்தாலும் சரி. ஆகட்டும் என்று சொல். அந்த ஒரு வார்த்தை.........போதும். இல்லை, யோசித்துச் சொல்லுவதானாலும் சரி. போதுமான சாவகாசம், உன்னிஷ்டப்படி எவ்வளவு நாள் வேண்டுமானாலும்... ......ஆகட்டும்............”என்று சற்றே நிறுத்தினான்.

புனிதவதியின் இருதயம் ஆனந்த மிகுதியினால் ‘படீர் படீர்’ என்று அடிக்கத் தொடங்கிற்று. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, “அதற்கென்ன? மாமாவைக் கேட்போம்” என்று ஏதோ ஒரு சர்வ சாதாரணமான விஷயத்திற்குப் பதில் சொல்லுவதுபோல் சொன்னாள்.

தணிகு ஒரே மயக்கத்தில் ஆழ்ந்தான். “மாமா இருக்கட்டும், உன்மட்டில் என்ன சொல்லுகிறாய்?” என்ற வார்த்தைகள் சற்று வேகமாகவே அவன் வாயினின்றுமெழுந்தன. புனிதம் சற்றுநேரம் ஒன்றுமே பேசவில்லை.

தணிகு மேலும் சொல்லத் தொடங்கினான். “என் புனிதம், மாமாவைக் கேட்பதற்கென்ன? இப்பொழுதே எழுப்பிக் கேட்டால் போகிறது”

“அடடா! என்ன அவ்வளவு அவசரம்? இந்த நள்ளிரவில் எழுப்பிக்கேட்டு, தூக்கக் கலக்கத்தில் ஒன்றுகிடக்க ஒன்றாய் உளறிவைக்கவா? யோசித்தால் போகிறது. நான் இதுவரையில் கலியாண விஷயமாய் யோசிக்கவேயில்லை. சொப்பனம்கூடக் காணவில்லை. திடீரென்று தூக்கவெறியில் எழுந்து ஓடிவந்து “என்னைக்கலியாணம் செய்துகொள்ளுகிறாயா?” என்று கேட்கிற வழக்கம் வெற்றிலை முதலியார் வீட்டு வழக்கமோ? இல்லாவிட்டால் சட்டம் படித்தவர்களுடைய வழக்கமோ? எனக்கு அப்படி திடீரென்று ஒன்றும் உளறத் தெரியாது, யோசித்து ‘நண்டு,’ ‘சின்ன பையன்’ எல்லோருடைய ஆலோசனைகளையும் கலந்து கொண்டுதான் சொல்ல முடியும்” என்று விஷமச் சிரிப்புடன் சொன்னாள் புனிதம்.

தணிகுவின் முகம் அசடு தட்டிற்று. அவள் கூறுவது உண்மையா பரிகாசமா, என்று அவனுக்கு விளங்கவில்லை.

“புனிதம், என்ன சொல்லுகிறாய்? நீ மறுத்துவிட்டால் அடுத்தது தற்கொலைதான். இந்தப் பரம சங்கடமான நிலைமையில் எத்தனை நாட்கள்தானிருக்க முடியும்? புனிதம், எங்கே, என் முகத்தைப் பார்த்துச்சொல் பார்க்கலாம்” என்று தவித்தான் தணிகைவேலன்.

அவள் மனதில் பழைய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக இறகு முளைத்து எதிரே வந்தன. அன்று சிவகாமியின் கலியாணத்தன்று தான் பட்ட மனவேதனையும், அதையொட்டி நடந்த விஷயங்களும் நினைவிற்கு வர, மெய்மறந்து அவைகளிலேயே ஈடுபட்டிருந்தாள் புனிதம்.

“புனிதம்! என்னுயிர் உன் கையிலிருக்கிறது. நீ இப்பொழுதே யோசித்து பதில் சொல்லுவதானாலும் சரி, நான் காத்திருக்கிறேன்” என்று அங்கேயே உட்கார்ந்துவிட்டான் தணிகு.

“அடே தருமராசா, அருச்சுனப்பயல் மின்னொளியாள் வீட்டிலேபோய்ச் சேர்ந்திட்டான். பேடிப் பயல், சுபத்திரை

யைக் கூட்டிக்கிட்டு ஓடலே, அட பொறுக்கி நாயே" என்று உளறியவளாய், புரண்டு படுத்துக்கொண்டாள் தேவானை அம்மாள்.

அந்தப் பைத்தியத்தின் உளறலுக்கும் தனக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதோ என்று கேட்பவன்போல் அவளை ஏறிட்டுப் பார்த்தான் தணிகைவேலன்.

வெகுநேரம் வரையில் கற்சிலைபோலுட்கார்ந்திருந்தாள் புனிதம். அவன் வார்த்தைகளுக்கு இணங்குவதா வேண்டாமா என்பதைப்பற்றி அவள் சிந்திக்கவே யில்லை. வெகுநாளாய்க் கட்டியிருந்த மனக்கோட்டை தன்னெதிரிலேயே சிதைந்துபோய் மறுபடி எழுந்து நின்றதை எண்ண எண்ண அவள் மனம் பூரித்தது. எதிர்பாராத அவ்வானந்த வெள்ளம் அவளை ஒரேமயக்கத்தில் ஆழ்த்தியது. உலகமே தலைகீழாய்ச் சுற்றுவது போல் தோன்றிற்று. கோடைமுழுவதும் பட்டுக்கிடந்த மரம், முதல் மாரியால் புதுத்தளிர் விடுவதேபோல் இவ்வளவு நாள் அவளால் வெறுக்கப்பட்ட உலக இன்பங்கள் மனதில் மறுபடி தோன்றலாயின. சிறு பருவத்தில் அவனையே நேசித்ததும், பிறகு இப்பிறவியில் இல்லை என்று ஒரே யடியாய் வெறுத்ததும், நெடுநாட்களுக்குப்பிறகு பல வருஷங்களுக்குப்பிறகு, எவ்வளவோ இன்பதுன்பங்களுக்கிடையில் மறுபடி மாறுதலடைவதை எண்ண அவள் மார்பு விம்மி விம்மி அமிழ்ந்தது.

ஒரே நிசப்தம். ஒரு பெருமூச்சு அதன் அமைதியைக் கலைத்தது.

"புனிதம்! புனிதம்" என்று மிகவும் தணிந்த குரலிற் கூப்பிட்டான் தணிகு. காதலானுருகிக் கூவும் மாடப்புறுவின் குரல்போல் அவன் குரல் தழதழத்தது.

பதிலே இல்லை.

மறுபடி கெஞ்சிக் கேட்கலானன் தணிகு.

"மாமா ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் எனக்கொன்றும் தடையில்லை" என்று பெருமூச்சுடன் சொன்னுள் புனிதம்.

தணிகைவேலன் புனிதத்தின் மெல்லிய மலர்க்கரங்களை ஸ்பரிசித்தான். அப்பொழுது அவன் அடைந்த உணர்ச்சியின் வேகத்தை தாங்கமுடியாமல் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான்.

அந் நிசியில், அந்நிலவின் பேரொளியில் அவர்களிருந்த நிலைமையை யாரால் சொல்லமுடியும்? தேவானையம்மாள் மட்டும் தன் மருண்ட கண்களால் அவர்களை ஏறிட்டுப் பார்த்தாள்.

"புனிதம், உன் கையை முத்த...மிடலாமா?"

"ஓகோ! என்ன! கருவேப்பிலைக்காரன் கதையாயிருக்கிறதே" என்று புருவத்தை நெறித்து ஏளனமாய்ச் சிரித்தாள் புனிதம்.

சடக்கென்று கையை இழுத்துக்கொண்டான் தணிகு. அவள் தன்னைப் பரிகசித்ததனால் வெட்கமும் சந்தோஷமும் ஒருங்கே உண்டாயின.

திடீரென்று புனிதத்திற்கு ஒரு எண்ணம் உதித்தது. தான் விவாகம் செய்து கொள்ளப்போவதாய்த் தெரிவித்தால் திடீரென்று ஏற்படும் மனமாறுதல்களினால் தேவானையம்மாள் பித்தந் தெளிந்து முன்போலாகக் கூடுமென்று அவளுக்குத் தோன்றிற்று.

ஏதோ ஒரு புத்தகத்தில் சோகத்தினல் மனங் கலங்கிய ஒருவருக்கு திடீரென்று நேரிட்ட ஒரு எதிர் பாராத சம்பவத்தினுல் பிரமை தெளிந்து விட்டதாகப் படித்த விஷயம் நினைவுக்கு வந்தது. ஆனந்த மிகுதியினல் அந்த இரவில் பிறகு அவளுக்குத் தூக்கம் வரவேயில்லை.

தேவானையம்மாளின் பரிதாப நிலைமையை உத்தேசித்தாவது உடனே தணிகுவைக் கல்யாணம் செய்துகொண்டுவிடவேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. அவனது நிலைக்கு தானும் கொஞ்சம் காரணம் தானே என்று அந்தராத்மாவினின்று ஓர் குரல் எழுந்தது. "ஐயோ! தேவானையம்மாள் எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறர்கள், என்னுடைய துறவி வாழ்க்கையை விட்டு கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று. சிவகாமி! உலகத்தை விட்டுத்தான் போனுயே! பாட்டியாரை இந்த நிலைமைக்கு உள்ளாக்க வேண்டுமா?" இப்படியாக புனிதம் பரிதவித்தாள்.

" ஹூம்! என் சுயநலத்தை உத்தேசித்துக் கல்யாணத்தை நினைத்தேன். ஆனால் இக் கல்யாணத்தால்... ஆம்; மாமாவுக்கு சந்தோஷம் உண்டாகாதா? பாட்டியார் பைத்தியம் தெளிந்து அவளுக்கு விமோசனம் உண்டாகாதா? வீட்டில் துக்கம் தீர்ந்து மறுபடியும் பழைய சந்தோஷ வாழ்வின் சாயை தோன்றுதா? பாவம்!... பாட்டியார் இதோ என்னமோ பிதற்றுகிறாள். நான் தணிகுவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகத் தெரிந்ததும் பைத்தியம் தெளியப் போகிறது. அப்போது பழையபடி எவ்வளவு உத்சாகமாக இருப்பாள்! எவ்வளவு கலகலப்பாக இருக்கும் வீடு?" என்று கனவு கண்டாள்.

கனவா! ஆம்; கனவுதான். உலகமே ஒரு கனவுதானே. உலகத்தில் நாம் நினைக்கிறபடியா எல்லாம் நடக்கிறது? மனிதனின் அறிவிற் கெட்டாத ஓர் சக்திதானே உலகத்தை ஆட்டி வைக்கிறது? அதுதானே நமது மனக் கோட்டைகளை எல்லாம் தகர்த்து நிர்மூலமாக்குகிறது?

இல்லாவிட்டால், புனிதத்தின் நினைப்புகள் ஏன் பாழாய்ப் போகவேண்டும்?

* * *

பொழுது புலர்ந்து பொற்கோழி கூவிற்று. லம்போதர முதலியார் "வேத நாயகன்" என்ற கீதத்தை பூபாள ராகத்தில் அற்புதமாகப் பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது குழந்தைகளுக்குப் போர்த்திவிட்டு, எழுந்திருக்கலாமா வேண்டாமா, இன்னும் சற்று நேரம் கழித்து எழுந்தாற் போதுமா, என்று எண்ணியவளாய் படுத்திருந்தாள் புனிதம். அந்தர வெளியில் பக்ஷி ஜாலங்கள் இன்னிசை எழுப்பி இறைவனை வாழ்த்திச் சென்றன. மாடிப்படியிலே சாவி குலுங்கும் ஓசை கேட்டுத் தலையைத் தூக்கினாள் புனிதம். தணிகு தட தடவென்று இறங்கி வந்து கொண்டிருந்தான். ஏது, அவனும் தூங்கவேயில்லை போலிருக்கிறது. சரி, எழுந்து பாலை வாங்குவோம் என்றெண்ணியவளாய் எழுந்து படுக்கையிலேயே உட்கார்ந்து, எழுந்தவுடன் சொல்லும் பதிகத்தைச் சொல்லத் தொடங்கினாள்.

தணிகு வெகு அவசரமாய் தேவானையம்மாள் படுத்திருந்த இடம் சென்றான். 'பாட்டி!' என்று கூப்பிட்டான். 'ஊம்!' என்று பதில் வந்தது. 'எழுந்திரேன். ஒரு சமாச்சாரம்" என்றான் தணிகு.

தேவானையம்மாள் அசையாமல் படுத்திருந்தாள். "பாட்டி! சொல்லட்டுமா? புனிதம் என்னைக் கட்டிக்கொள்ளுகிறேன் என்கிறாள்" என்றான்.

"என்ன?" என்று திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள் தேவானையம்மாள்.

"ஆமாம், பாட்டி! புனிதம் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாள்."

'உன்னையா?' என்று கேட்டபடி சுவரில் திடீரென்று சாய்ந்தாள். 'பாட்டி!' என்று கூப்பிட்ட அவன் "ஐயோ, அப்பா! ஓடி வாருங்களேன்!" என்று கூக்குரலிட்டான். புனிதமும் முதலியாரும் ஓடி வந்தார்கள். தேவானையம்மாள் சிரித்த முகத்துடன் காட்சியளித்தாள். அவளது விழிகள் விழித்தபடியே இருந்தன.

(தொடரும்)

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

அகமுடையாள் பேரிலிருந்த அவன் கோபம் வேறு எங்கேயாவது பாயவேண்டுமல்லவா? "அந்த மடையன் எதற்காக இங்கிலீஷில் எழுதுகிறான்? நல்ல இங்கிலீஷ் பாஷை! அர்த்தத்தை அனர்த்தம் பண்ணுகிற பாஷை!" என்று நாராயணன் பேரிலும் ஆங்கில பாஷையின் பேரிலும் கோபத்தைக் காண்பித்தான்.

துஷ்ட நண்பன்

ஒரு மரத்தின் கிளையில் ஒரு காகம் உட்கார்ந்திருந்தது. "கா! கா!" என்று அது கத்தினதும் கீழே போய்க்கொண்டிருந்த ஒரு கோழி அண்ணாந்து பார்த்தது. உடனே காக்கா கேட்டது: "ஏ! கோழி. எங்கே போகிறாய்?" "அண்ணா! நான் இறை தின்னப் போகிறேன். இவ்வளவு நாழி நான் காலாற உலாத்தினேன். நாழியாகி விட்டது; நான் போகிறேன்" என்றது.

"தம்பி! நானும் வருகிறேன். எனக்கும் ஆகாரத்தில் கொஞ்சம் தருகிறாயா?" "ஐயோ! பாவம். நீ ஒன்றுமே சாப்பிடவில்லைபோல் இருக்கிறது. நாம் இருவரும் சாப்பிடலாம். ஆனால் நீ இங்கேயே இரு. நான் கொண்டுவந்து கொடுக்கிறேன். நீ அங்கே வந்தாயானால் உன்னைத் துரத்தி விடுவார்கள்."

'சரி' யென்றது காக்கை. பிரதினமும் கோழி காக்கைக்கு ஆகாரம் கொண்டு வந்து கொடுக்கும்.

ஒரு நாள் காக்கைக்குப் பொறாமை உண்டாயிற்று. "நம்மைப் போல கோழியும் ஒரு பக்ஷிதானே. நம்மை வைத்து ஒருவரும் ரக்ஷிக்க மாட்டேன் என்கிறார்கள். நான் எங்கேயாவது ஆகாரத்தைத் தேடிக்கொண்டு வீடுகளுக்குப் போனால் 'உஷ்!' 'உஷ்!' என்று விரட்டுகிறார்கள். ஆனால் இந்தக் கோழிக்கு மட்டும் விதவிதமான ஆகாரங்கள்!" என்று காக்காவுக்கு கோழியின் பேரில் துவேஷம் உண்டாகி விட்டது. மறுநாள் கோழி ஆகாரம் கொண்டு வந்தது. "தம்பி! இந்த சமாசாரம் உனக்குத்தெரியுமா?" என்று ஆரம்பித்தது காக்கை. "என்ன?" என்று கேட்டது கோழி. "உன்னை உன் எஜமானர்கள் கொல்லப் போகிறார்கள் நாளைக்கு. நீ உயிர் தப்பவேண்டுமானால் இன்றைக்கே ஓடிப்போய்விட வேண்டும்" என்றது.

"ஐயோ! இது உனக்கு எப்படித் தெரியும்?" என்று பதறிக்கேட்டது கோழி.

"இன்று காலையில் கூரைமேல் உட்கார்ந்து கொண்டிருந்தேன். பேசிக்கொண்டிருந்தார்கள். உள்ளே காதில் விழுந்தது."

"ஐயோ! நான் என்ன செய்வேன்?" என்று கோழி கதறிற்று.

"நீ தப்பிப் பிழைக்கவேண்டுமென்றால் என்னோடு வந்து விடு. உன்னை அழைத்துக் கொண்டு பத்திரமான இடத்துக்குக் கொண்டுபோய் விடுகிறேன். கிளம்பு உடனே."

கோழியும் காக்கையுமாக உடனே புறப்பட்டு மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தன. பாதிதூரம் கூடப் போகவில்லை. ஒரு பூனை ஒன்று ஓடி வந்து கோழியைத் துறத்த ஆரம்பித்தது. காக்கை பறந்து போய் தப்பிக்கொண்டது. கோழிக்குப் பறக்க முடியாமல் பூனையிடம் அகப்பட்டுக் கொண்டது. பூனை அதைக் கொன்று போட்டது.

காக்கை இதைப் பார்த்துக்கொண்டு சிறிதுநாழிகை அருகிலுள்ள மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது. உள்ளூர அதற்கு ரொம்ப சந்தோஷம்தான். தான் எதைச்செய்த நினைத்ததோ அதை அந்தப் பூனை செய்துவிட்டது. ரொம்ப நல்லதாய் போயிற்று. ஆகவே காக்கை குதூகலத்தோடு ஆகாய மார்க்கமாய் பறந்து பழைய மரத்திற்கு வந்து விட்டது.

வீட்டிலுள்ளவர்கள் கோழியைக் காணாமல் தேடினார்கள். வெளியே வந்து சுற்றிப் பார்த்தார்கள். "ஐயோ! கோழியைக் காணோமே" என்று குழந்தைகள் அழுதன. எல்லோருக்கும் கோழி பேரில் அவ்வளவு ஆசை. ஆனால் காக்கை மரக் கிளையில் உட்கார்ந்து கொண்டு இதைப் பார்த்தது. அதன் முகத்தில் வெற்றிக்களை கூத்தாடியது.

விவசாய தொழில் அனுபந்தம்

கிராமத்தின் சீர்கேடு

(ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்)

ஆங்கில அரசாட்சி ஆரம்பித்து ஒரு நூற்றாண்டிற்குள் இந்திய கிராமங்கள் சீர்குலைந்து போய்விட்டன. ஹிந்து ராஜாக்களின் ஆதரவின் கீழ் பாடுபட்டுப் பெற்று செழித்து வளர்ந்த கிராமங்கள் முகம்மதிய அரசர்கள் காலத்திலும் சிதைவு பெறாமல் தங்கள் தங்கள் வாழ்க்கையை கலவரமற்றே நடத்திவந்தன. ஆனால் ஆங்கில அரசாட்சியும் அதன் 'உதவி'களும் இந்தியாவில் நிலைபெற்றது தான் தாமதம்; கொஞ்சம் கொஞ்சமாக கிராமங்கள் தங்கள் உயிர் ரத்தத்தைப் பறி கொடுத்து சோகை கொண்டு சாக ஆரம்பித்தன.

கிராமத்தின் செழிப்பிற்கு விவசாயமும் கைத்தொழில்களும், நிலமும் நீரும் போல; அவை இரண்டும்தான் கிராமத்திற்கு ஹிருதயமும் சுவாஸப்பைகளும். ஆங்கில அரசாட்சி வந்தவுடனே கைத்தொழில்களை—சுவாஸப் பைகளை—க்ஷய ரோகம் போலக் தாக்கிற்று. கிராமத்துத் தச்சனுக்கும், கொல்லனுக்கும், நூல் நூற்பவனுக்கும், நெசவாளிக்கும், கை முறிந்தது; அவர்கள் கையிலிருந்த ஆயுதங்களை ஆங்கில வியாபாரிகள் பலாத்காரமாகப் பறித்து அவர்களை நிராயுதபாணிகள் ஆக்கினார்கள்.

மேல்நாட்டு சாமான்கள் துணிகளாகவும், ஆணி முதலிய இரும்புக் கருவிகளாகவும், நாட்டில் வந்து குவிந்து, நாட்டுத் தொழிலாளிகளுக்கு வேலையின்றிச்செய்து விட்டன. டாக்கா மஸ்லின் செய்தவர்களின் கட்டைவிரல்கள் நறுக்கப்பட்டதென்று கேள்விப்படுகிறோம். அதில் ஆழ்ந்த பொருள் இருக்கிறது. உள்நாட்டுத் தொழிலாளிகளின் கட்டைவிரல்கள் மேல்நாட்டுச் சாமான்களின் போட்டியால் நறுக்கத்தான் பட்டுவிட்டன.

இரண்டாவதாக, கிராமத்தின் ஹிருதயமாகிய விவசாயமும் தாக்கப்பட்டது. கைத்தொழில்கள் க்ஷீணம் அடைந்ததும் விவசாயத்தில் போட்டி அதிகமாயிற்று. தொழிலாளிகள் வேலையின்றி, வேறு பிழைக்கும் வழியுமின்றி, விவசாயத்தையே சரணமடைந்தார்கள். அதிலும் போதிய அளவு வேலை அகப்படாததால் வெளி நாடுகளுக்குக் குடிபோக ஆரம்பித்தார்கள். கண்டி, கொழும்பு அக்கரை சீமைகளுக்கு ஏராளமான கிராம மக்கள் நாடு கடத்தப்பட்டதுபோலச் சென்றார்கள்.

ஆங்கிலப்படிப்பின் மோகம் அதிகரிக்க அதிகரிக்க ஜனங்கள் கிராமத்திலிருந்து பட்டணங்களுக்கு வர ஆரம்பித்தார்கள். வீடுக்ள் குடியிருக்க ஆளின்றி பாழடைய ஆரம்பித்தன; நிலங்கள் யஜமானனின் மேற்பார்வையின்றி உரங்குன்றி சக்கையாக ஆரம்பித்தன. குத்தகைக்கு உழும் குடியானவர்கள் ஏர் மாடு வாங்கவும் உரம் வாங்கவும் சக்தியற்றுப் போனதால் விளைச்சல் வரவரக்குறைய ஆரம்பித்தது. ஆனால் நிலவரிமட்டும் ஒவ்வொரு செட்டில்மெண்டிலும் அதிகமாகிக்கொண்டு வந்தது. பிரிட்டிஷ் சர்க்காரின் நிலவரிக் கொள்கை விவசாயிகளின் அடிமடியில் கைபோட்டுப் பணம் பறித்தது. விளைச்சலை வரிக்குக் கொடுத்துவிட்டுக் குடியானவன் பயிர்த்தொழிலுக்கும் சாப்பாட்டிற்கும் கடன் வாங்க ஆரம்பித்தான். சர்க்கார் ஒரு திட்டமான முறையில் கலால் இலாகாவை ஏற்படுத்தி நாடெங்கும் கள்ளுக் குத்தகையையும் கள்ளுக் கடைகளையும் ஏற்படுத்தவே குடி அதிகமாயிற்று; பிரிட்டிஷ் அரசாட்சிக்கு முன் குடி இல்லை என்பதல்ல; இருந்தது. ஆனால் ஆங்கில அரசாட்சியின் கீழ் தான் கள்ளுக்கடைகள் இவ்வளவு விரிவாகவும் ஏற்பாடாகவும் கிராமந்தோறும் அமைந்தன. கள் விலையும் மிதமிஞ்சிப் போயிற்று. குடியானவன் தன் புது வறுமையையும் நோயையும் மறக்க அளவுக்கு மீறிக் கள்ளைக் குடிக்கும் பழக்கத்தில் ஈடுபட்டான்.

இப்படிப் பல காரணங்களால் கிராம வாழ்க்கை சின்னாபின்னமாகி, கிராம சுய

(27-ம் பக்கம் பார்க்க)

பொன்னேரி மராமத்து

திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுகாவில் கங்கைகொண்ட சோழபுரம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அது ஜயங்கொண்ட சோழபுரத்திற்கு ஆறு மைல் கிழக்கேயும் சென்னை - கும்பகோணம் ரஸ்தாவிற்கு ஒரு மைல் மேற்கேயுமாக இருக்கிறது.

அது ஒரு காலத்தில் சோழ ராஜாக்களின் தலைநகராக இருந்தது. ராஜேந்திர சோழரால் நிர்மாணம் செய்யப்பட்ட நகரம் இன்று சிர்குலைந்த ஒரு சிறு கிராமமாக இருக்கிறது. அதன் பக்கத்தில் இருக்கும் பாழடைந்த மதில்களும் சுவர்களும் பழைய ராஜதானி நகர் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. தஞ்சாவூர் கோவிலைப்போல அங்கே ஒரு கோவில் இருக்கிறது. அதுவும் ஜீர்ணமான நிலைமையில் இருக்கிறது.

அதற்கு ஒரு மைல் மேற்கே ஒரு பிரும்மாண்டமான 'லயன் கரை' இன்றும் இருக்கிறது. அது பதினாறு மைல் நீளம். பல பெரிய மதகுகளும் பல இடங்களில் இருக்கின்றன. அங்கேதான் ராஜேந்திர சோழன் நிர்மாணம் செய்த பொன்னேரி ஒரு காலத்தில் சமுத்திரம் போலப் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. இந்தியாவிலேயே மிகப் பெரிய தான ஏரிகளில் அது ஒன்று. கொள்ளிடத்திலிருந்து 60மைல் நீளம்கொண்ட ஒரு கால்வாய் ஒன்று ஜலம் கொண்டு வந்து அதன் தென் பாகத்தில் அதை நிரப்பிற்று; வடக்கே வெள்ளாற்றிலிருந்து ஒரு கால்வாய் அக்காட்டாற்றின் வெள்ளத்தைக் கொண்டுவந்து கொட்டிற்று. அரியலூர் உடையார்பாளையம் பிரதேசங்களின் முக்கால்வாசி நிலங்களுக்கு அந்த ஜலம் பாய்ந்தது. பொன்னேரிப் பாசனம்பெற்ற அந்த நாடு செந்நெல் நிறைந்த பொன் நாடாக இருந்தது.

எதிரிகள் யாரோ நாட்டின் படையெடுத்தபொழுது அந்த ஏரியை நாசமாக்கிவிட்டார்கள் என்று தெரிகிறது. அந்த இரண்டு கால்வாய்களின் அடையாளம் இன்றும் இருக்கிறது. ஏரியில் இப்பொழுது புதர்க்காடு மண்டியிருக்கிறது. உள்வாய் பூராவும் சாகுபடி நிலங்களாக மாறிவிட்டது. அரியலூர் உடையார்பாளையம் தாலுக்காக்கள் இரண்டும் மானம் பார்த்த சீமையாகிவிட்டன. எங்குப் பார்த்தாலும் பொட்டல்கள்தான்.

ராஜேந்திரசோழன் மிகுந்த யோசனையுடன் அந்த ஏரியை நிர்மித்ததாகத் தெரிகிறது. அதனால் தமிழ் நாட்டின் ஒரு பெரும் பகுதி செழிப்பும் சீரும் கொண்டு ஓங்கிற்று. அது போனதும் மக்கள் விவசாயம் செய்ய முடியாது கொள்ளைக்காரர் ஆனார்கள்.

1837-க்கு முன்னால் இந்த ஏரியை மராமத்து செய்து மறுபடி நீர்ப்பாசனமாக்கலாம் என்று டி. ஆர். எல். கோஷ்டியினர் ஆராய்ச்சி நடத்தினார்கள். மேல் அணைக்கட்டிலிருந்து ஒரு கால்வாய் பிடித்து அதற்குக் கொண்டு வரலாம் என்று திட்டம் போட்டார்கள். ஆனால் கால்வாய் வெகு நீளமாக இருக்கவேண்டியிருக்கும் என்ற காரணத்தாலும், அதனால் மூலதனம் அதிகம் நஷ்டமாகும் என்ற தயக்கத்தாலும் அந்த உத்தேசத்தை நிறுத்தி விட்டார்கள் கடைசியாக.

பொன்னேரியை மறுபடியும் மராமத்து செய்து நீர்ப்பாசனமாக்க இப்பொழுது ஒரு முயற்சி செய்து பார்க்கலாமென்று நாம் கருதுகிறோம். பழைய தஸ்தாவேஜிகளை வைத்துக்கொண்டு மறுபடியும் ஆராய்ச்சி நடத்தினால் நல்லது எனத் தோன்றுகிறது. அந்த ஏரியை ஜீரணோத்தாரணம் செய்தால் இரண்டு பெரிய தாலுகாக்கள் சுபிட்சமடையும்.

அது மட்டுமல்ல; தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் தலை சிறந்து விளங்கிய ஒரு மன்னனுடைய வேலையை நாம் சீர்ப்படுத்திச் சேகரித்து வைத்தவர்கள் ஆவோம். மட்டற்ற ஆசைகள்கொண்டு

நாட்டை நலமிக்கச் செய்த அந்த மகா புருஷனின் நினைவை நாம் என்னாளும் உயிர் கொடுக்கும் ஒரு அடையாளமாகப் பாராட்டலாம். அவரே அதை தன்னுடைய ஜலத்துவஜமாகக் கருதினர். கங்கை நீரைக் கொண்டுவந்து அதில் கொட்டி அதைப் பெருக்கி வைத்தார். கொஞ்சம் அதிகமாகச் செலவானபோதிலும் அதை மறுபடியும் மராமத்து செய்து நீர்ப்பாசனமாக்க இடமிருந்தால் சர்க்கார் அதை செய்து முடிக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த விஷயத்தில் பொது மக்களும் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டு நமக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்றே இங்கே இதைப் பிரசுரிக்கிறோம்.

பொன்னேரியைப் புதுப்பிக்க வேண்டுமென்று அரியலூர் உடையார் பாளையம் தாலூகா மக்களும் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. பஞ்சாயத்துகள் உபயோகிக்கப்படாத கிணறுகள்போலப் பாழடைந்தன. குடி மராமத்தின்றி நீர்ப்பாசனங்கள் உலர்ந்து, பசும் நிலங்கள் பரந்த தரிசுகளாக மாறின. குளங்கள் மேடுதட்டி உடைப்பெடுத்து உருப்படி இல்லாமல் போயின. அப்படிப் போனவைகளில் ஒன்று ராஜேந்திர சோழன் நிர்மாணம் செய்த பொன்னேரி என்ற பிரும்மாண்டமான ஏரி; அது சிரழிந்ததால் அரியலூரைச் சுற்றியிருக்கும் பிரதேசம் பூராவும் காடாரம்பமாக மாறிவிட்டது.

அடுத்த கட்டுரையில் கிராமம் என்பது என்ன என்பதையும் அதன் அமைப்பு, தொழில், வீதாசாரம் முதலியவற்றையும் கவனிப்போம்.

KHANDUR காந்தூர் کاندور   KHANDUR O.K LEHYAM REGISTERED TRADE MARK   مقوی LEHYAM லேகியம்

ஆரோக்கியமே நல்ல தனம்

இந்த அருமையான லேகியம் நன்கு பரிசோதிக்கப்பட்டு சுமார் 95 வருஷ காலமாக கீழ்க்கண்ட வியாதிகளாகிய பித்த வெட்டை, சோகை, மஞ்சட்காமாலை, பாண்டு, வீக்கம், இரத்தக்குறைவு, கைகால் அசதி, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல், பசியின்மை, தாது பலக்குறைவு, இளமையில் முதுமைபோல் தோன்றும் அகால மூப்பு, பிரசவத்துக்குப்பின் ஏற்படும் பலக்குறைவு, கண் ஒளி மங்கல், கண்மாசி பூத்தல் முதலிய வியாதிகளைப் போக்க பிரசித்திபெற்றது.

நற்பலன்பெற 48 தோலா எடையுள்ள காந்தூர் லேகியத்தை 40 நாள் சாப்பிடல்வேண்டும். "பலன் பெருவிடில் பணம் வாபஸ்" செய்ய உத்தரவாதம் பெற்ற இந்த ஒரே லேகியத்தை ஓர் முறை பரிட்சித்து உண்மையுணர்ந்து உங்களன்பர்கட்கு உபதேசிக்கக் கோருகிறோம்.

12 தோலா	(10 நாள்)	லேகியம்	...	ரூ. 1 0 0
24 ,,	(20 ,,)	,,	...	ரூ. 2 0 0

காந்தூர் லேகியம் டிப்போ, பம்பாய் — சென்னை — கல்கத்தா.

Sole Agents:—(For INDIA, BURMA, CEYLON & F. M. S.)

நயினுர்சன் அண்டு கம்பெனி,

198, அங்கப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., சென்னை.

ஸ்டாக்கிஸ்ட்கள் தேவை

பழ வியாபாரம்

(ஒரு நிருபர்)

பூனாவுக் கருகிலுள்ள கிர்க்கி என்னுமிடத்தில் பழப் பரிசோதனை எக்ஸ்பரிமெண்ட் ஸ்டேஷன் ஒன்று இருக்கிறது அங்கு பழங்களை வெகு நாட்கள் கெடாமல் எப்படிப் பாது காப்பது என்பதுபற்றி ஆராய்ச்சி நடந்து வருகிறது. அங்கு நடந்த பரிசோதனைகளில் வெற்றியடைந்தார்கள். அந்த பரிசோதனைகளின் முடிவு, டெல்லி விவசாய கவுன்சில் பரிசோதனை வெளியிடும் பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது.

அங்கு பரிசோதித்துத் தேர்ச்சியடைந்த முறைகளில், பழங்களையும் காய்கறிகளையும், நீண்ட காலத்துக்குக் கெடாமல் பாது காக்கலாம் என்பது விளங்குகிறது.

ஒரு ஜாதி பழத்தைக் கெடாமல் கொஞ்ச நாட்கள் காப்பாற்ற அதை எந்த ஸ்திதியில் வைக்கவேண்டும்? எவ்வளவு உஷ்ணம் இருக்கலாம்? என்கிற பிரச்னைகளுக்குப் பதிலளிக்கிறது மேலே குறிக்கப்பட்ட பரிசோதனையின் முடிவு.

கணேஷ்கண்ட் பரிசோதனை ஸ்தலம் ஒன்று இம்பீரியல் விவசாயசபையின் இளமைப் பருவத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. பம்பாய் சர்க்காரின் முயற்சியாலும், இன்னும் பல தேர்ந்தவர்களின் அரிய யோசனையாலும் 1934-ம் வருஷம் மார்ச்சு மாதம், பழங்களைக்கெடாமல் காக்கும் தொழில் தொடங்கப் பெற்றது. முதல் மூன்று வருஷத்திற்கு ரூ. 90,154 செலவில் நடத்துவதாக நிச்சயிக்கப்பட்டது. பிறகு அந்த காலம் முடிந்த உடன் இன்னும் ரூ. 50,188 அதிக செலவில் மற்றும் மூன்று வருஷங்களுக்கு நீடிக்கப்பட்டது.

இந்த வேலையைத் திறமையுடன் நடத்தியவர்களுக்கு பல இடங்களிலிருந்து உதவி கிடைத்தது. குளிர்ச்சி அளிக்கும் முறையில், கேம்பிரிட்ஜ் லோ டெம்பெரேசர் ரிஸர்ச் ஸ்டேஷனில் (Low temperature station) வேலை செய்பவர்களிடமிருந்து மிகுந்த உதவி கிடைத்தது. இதற்கு வேண்டிய இயந்திரங்களை இங்கிலாந்திலிருக்கும் ஜே அண்டு இ. ஹால் (லிமிடெட்) கொடுத்துதவினார்கள். இந்தத் தொழிலை, பம்பாய் சர்க்கார் விவசாய எஞ்ஜினீயர் மேற்பார்வை பார்த்தார்.

இந்த முறைகளால் பழங்களை, நீண்ட காலத்திற்குக் கெடாமல் காப்பாற்ற எப்படி முடிகிறது என்று கவனிப்போம். எல்லா ஜெந்துகளும் ஜீவிப்பதுபோல பழங்களும் உயிர் வாழ்கின்றன. அவைகளும் பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவை வெளிவிடுகின்றன. ஆனால், இவைகளைக் குளிர்ந்த இடத்தில் வைத்து பாதுகாப்பதனால் அவைகளின் ஆயுள் அதிகரிக்கிறது. பழங்களைக் கெடுக்கும் கண்ணுக்குத் தெரியாத பல ஜெந்துக்கள், அவைகளில் உற்பத்தியாகி விருத்தியடைவதை இந்த முறை தடுக்கிறது.

பழங்கள் வைத்திருக்கும் இடத்தின் உஷ்ணம் குறையக் குறைய அவைகளின் ஆயுளும் நீடிக்கிறது. இது எல்லா பழங்களுக்கும் சொல்ல முடியாது. சில பழங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுதான் உஷ்ணம் இருக்க வேண்டும். அதற்குக் கீழ் போனால் தேவையான பலன் அளிப்பதில்லை. இந்த, ஒவ்வொரு வகைப் பழத்துக்குத் தகுந்தாப்போல் உஷ்ணத்தை நிர்ணயிப்பது பரிசோதனைகளால் தான். இப்படிக் காப்பாற்றி வியாபாரத்துக்கு உபயோகப்படும் மாம்பழங்களில், பம்பாயில் கிடைக்கும் அலபன்ஸோ, பைரி, கவாஸ்ஜிபடேல் முதலிய வைகளும், மதராஸிலிருந்து வரும் பீத்தரும், ஐக்கிய மாகாணத்தில் கிடைக்கும் பாஸ்ரி ஜப்ரானி என்ற பழமும்தான் முக்கியமானவை.

நமது ராஜதானியில் உள்ள இன்னும் மற்ற பழவகைகளையும் எப்படிக் கெடாமல் பத்திரப்படுத்தி அனுப்ப முடியும் என்பதைப்பற்றி சர்க்கார் தொழில் இலாகா கொஞ்சம் பரிசீலனை செய்து தங்கள் முடிவின் பயனை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தினால் மிகவும் உபயோகமுண்டு.

கால்நடை வியாதிகளின் சின்னங்கள்

(ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி).

மிருக வைத்தியத்திற்கும் மனித வைத்தியத்திற்கு முள்ள அடிப்படையான வித்தியாசம் வியாதியை நிர்த்தாரணம் செய்வதில்தான் இருக்கிறது. நாம் டாக்டரிடம் நமது தேகத்திலிருக்கும் உபாதைகளைச் சொல்லிக் கொள்ளுகிறோம். இதைக் கொண்டும் இன்னும் சில பரீக்ஷைகள் செய்தும், டாக்டர் நமது ரோகத்தை ஒருவாறு நிர்ணயித்து சிகிச்சை செய்கிறார். கால் நடை இலாகா டாக்டர்களோ, பேசுந் திறனற்ற மாடுகளின் வியாதியை, அவைகள் வெளிப்படையாய்க் காட்டும் சின்னங்களைக் கொண்டும், மாடுகளைக் கவனிக்கும் வேலைக்காரர்களைக் கொண்டும் நிர்தாரணம் செய்யவேண்டும். சின்னங்களைக் கொண்டு ஒரு வியாதியைக் கண்டு பிடித்தல் மிகப் பிரயாசை. அனேக சின்னங்கள், வேறு வேறு பாதைகளைக் குறிப்பதோடு, சில சமயங்களில் ஒரே விதமான சின்னங்கள் பல வியாதிகளில் காணப்படலாம். மாட்டை கவனிக்கும் வேலைக்காரர்களால் நமக்கு குழப்பம் ஏற்படுமே தவிற நமக்கு ஒத்தாசையாய் ஒன்றும் சொல்லமாட்டார்கள். அவர்களின் அஜாக்கிரதையால் ஏதாவது மாட்டுக்குக் கெடுதி ஏற்பட்டிருக்கும்பொழுது நம்மிடம் உண்மையைத் தெரிவிக்காமல், நமக்கு இயற்கையாய் ஏற்படக்கூடிய அபிப்பிராயங்களை மாற்றியே விடுவார்கள். ஆகையால் இவர்களாலும் டாக்டர்களுக்கு ஒன்றும் பிரயோஜனமில்லை. கடைசியாக, 'சீக்காய்' இருக்கும் மாட்டை ஒரு அற்ப விஷயத்தைக்கூட அலக்ஷியம் செய்யாமல், நன்றாகப் பரீக்ஷை செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டும். இந்த முடிவிற்கு வராமல் வைத்தியம் செய்ய முடியாதல்லவா?

வியாதியைக் கூடியவரை நிர்தாரணம் செய்வதே டாக்டரின் முதன்மையான கடமை. இதற்கு சின்னங்களைத் தெரிந்துகொண்டு இந்த இந்த சின்னங்கள் தேகத்தில் இன்ன இன்ன மாறுதலையோ 'நிலைமையையோ குறிக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். வியாதி என்றால் என்ன? 'தேகத்தின் ஆரோக்கியமில்லாத நிலைமையே, வியாதி. ஆரோக்யமில்லாத நிலையைத் தெரிந்து கொள்ள ஆரோக்கிய நிலை நன்றாய்த் தெரியவேண்டுமல்லவா?

மாடுகள் ஆரோக்கியமாய் இருக்கும்போது நன்றாக ஒவ்வொரு வேளையும் தீனி தின்ன வேண்டும்; ஜலம் குடிக்க வேண்டும்; கிரமமாய்த் தூங்கவேண்டும்; சுறுசுறுப்பாக இருக்கவேண்டும்; தெளிவாகக் காணப்படவேண்டும். மாடுகள் நிற்பது சகஜமாய் இருக்கவேண்டும். ஒரு காலைத் தாங்கியோ, சரீரத்தின் ஒரு பாகத்தை வளைத்துக் கொண்டோ நிற்கக்கூடாது. காதுகள் தொங்காமல் நிமிர்ந்து நிற்க வேண்டும். கீழ் உதடு தொங்காமல் பல்லோடு ஒட்டி யிருக்கவேண்டும். மூக்கின் மேல் ஜலத்துளிகள் எப்பொழுதுமிருக்க வேண்டும். காய்ந்து வற வறவென்று இருக்கக்கூடாது. தீனி தின்ன ஆசை இருக்கவேண்டும். "மாட்டுக்குத் தீனி போடவில்லை — வேளையாய் விட்டது. தும்பை அறுத்துக்கொள்கிறது" என்று சொல்கிறோமல்லவா, இந்த நிலைமை தவறாமல் இருக்கவேண்டும். பசு கன்றை உதைக்காமல் பால் எப்பொழுதும்போல் கொடுக்கவேண்டும். சாதாரணமாய் இரவில் புல் படுக்கைபோட்ட விடத்துத்தான் குதிரைகள் தூங்கவேண்டும். நாய்கள் மாமூலாய் எஜமானன் மேஜையின் கீழோ, அல்லது குழந்தைகளோடு விளையாடிக்கொண்டோ இருக்க வேண்டும். அசை போடும் பிராணிகள் தீனி தின்றபின் அசை போடவேண்டும். பால் கொடுக்கும் பசு மாமூல் அளவுக்குக் குறையாமல் பால் கொடுக்கவேண்டும்.'

தேகத்தின் இயந்திரங்களின் வேலைகளும் மாமூலாய் இருக்கவேண்டும். ரத்த ஓட்டம் சரியா யிருக்கவேண்டும். அதாவது ரத்த ஓட்டத்திற்கு மூல காரணமாயுள்ள ஹிருதயம் சரியான ஸ்திதியில் இருக்கவேண்டும். இதை எப்படி

தெரிந்து கொள்கிறது. ஹிருதயம் அடித்துக் கொள்ளுகிறது என்று சொல்லுகிறோமே. ஒரு சமயம் பீதியினலோ, அதி வேகமாய் மேட்டேறி ஓடும்போதோ படபடவென்று அடித்துக் கொள்ளுகிறதல்லவா? இது ஹிருதயம் செய்யும் வேலை. ஒவ்வொருதரம் அடித்துக்கொள்ளும்பொழுது தன்னுள்ளிருந்து ரத்தத்தை ரத்த நாடிகளுக்குள் செலுத்துகின்றது. இந்த ரத்தம் ரத்த நாடிகளில் ஓடுகிறது. குளத்தில் ஒரு கல்லைப்போட்டால் சக்கரமாக அலைகள் முதலில் பெரிதாகவும் போகப்போக சிறிதாகவும் ஒன்றன்பின் ஒன்று போவதைப் பார்க்கிறோமல்லவா? அதே மாதிரி ஹிருதயத்திலிருந்து ஒவ்வொரு தடவை ரத்தம், நாடிகளுக்குள் பாயும்போது, மேற்சொன்ன மாதிரி, ரத்த வாய்க்காலில் பெரிய அலையாய் ஆரம்பித்து கடைசியில் சிறிய சிறிய அலையாய் மோதிக்கொண்டு ஓடுகின்றது. இந்த அலை ரத்தக் குழாயில் மோதிக்கொள்வதை தோலினுள் மேலாகத் தெரியும் ரத்த நாடிகளில் நமது விரல்களை வைத்துப் பார்த்தால் 'டக் டக்' கென்ற சப்தத்தை உணருகிறோம். இது தான் நாடி. இது குதிரைகளுக்கு ஒரு நிமிஷத்தில் 35 முதல் 40 தடவை அடித்துக் கொள்ளும். மாடுகளுக்கு சுமார் 50 தடவை, நாய்களில் 80 தடவை முதல் 100 தடவைகளும் அடித்துக்கொள்ளும். இந்த நாடி எவ்வளவு தடவை ஒரு நிமிஷத்தில் அடித்துக்கொள்ள வேண்டுமோ அதே மாதிரி நாடியின் பலம், கடினம், மிருது கை உணர்ச்சிக்கு தெரியாதபடி பலக்குறைவா யிருப்பது, இவைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். நமக்கு நாடியைப் பார்ப்பதுபோல் குதிரைக்கு கீழ் முகவாய்க்கட்டையிலும், மாடுகளுக்கும் அதே இடத்திலும் வாலின் அடிப்பாகத்தின் கீழ் பக்கத்திலும், நாய்களுக்கு தொடையின் உட் பாகத்திலும் நாடியைப் பரீக்ஷிக்கலாம்.

சரீரத்தில் உள்ள சகல இயந்திரங்களும், சதை, கண்டம், எலும்பு முதலானவை சதா காலமும் ரத்தத்தினல் போஷிக்கப்பட்டு, ரத்தத்திலுள்ள சத்து தேகத்திற்கு மாறி, தேகத்திலிருந்து சத்து நீங்கினவை மறுபடி ரத்தத்திற்கு மாறுவதால் தேகத்தில் எப்பொழுதும் ஓரளவு உஷ்ணமிருக்கிறது. இந்த உஷ்ணம் ஆரோக்கிய தேகத்தில் குதிரைகளுக்கு 100·4 டிகிரி, மாடுகளுக்கு 101·4, ஆடுகளுக்கு 103, நாய்களுக்கும் பூனைகளுக்கும் 101·4 டிகிரியும் இருக்கவேண்டும். தீனி தின்னும் போதும், நடக்கும்போது, ஏதோ ஒன்றைக் கண்டு மிரண்டு கொண்ட பொழுதும் அரை டிகிரி ஒரு டிகிரி கூட இருக்கலாம். பக்ஷிஜாதிகளில் 107 முதல் 108 டிகிரி வரை இருக்கும். இந்த உஷ்ணத்தை அளக்க ஒரு கருவி இருக்கிறது. இந்தக் கருவியை நமக்கு வாயில்வைத்து உஷ்ணத்தின் நிலைமையைத் தெரிந்துகொள்ளுகிறோம். மிருகங்களுக்கு சாணிபோடு மிடமாகிய குடலின் கடைசிப் பாகத்தில் இந்தக் கருவியை வைத்து எடுக்கிறோம்.

மூச்சு விடும் இயந்திரங்களாகிய காற்றுப் பைகள் சரியானபடி வேலை செய்து கொண்டிருக்கவேண்டும். மாடுகள் ஒரு நிமிஷத்தில் 10, 12 தடவை மூச்சு விடும். தீனி தின்ற பிறகு கோடைகாலத்தில் மாடுகள் மூச்சு விடுவது அதிக துரிதமாயிருக்கும். மாடுகளின் சுபாவ குணங்களில் அனுபவமில்லாதவர்களுக்கு காத்துப் பைகளில் ஏதோ கெடுதி ஏற்பட்டு விட்டது என்றுகூட நினைக்கும்படி இருக்கும்.

சாணி, கெட்டியாகக் காய்ந்து வரட்சையாயில்லாமலும், தளர்ந்து குழம்பாக இல்லாமலும் நடுத்தரமாக இருக்க வேண்டும். எப்பொழுதும் உள்ள அளவுக்கு ஜாஸ்தியாயு மிருக்கக்கூடாது. பிரயாசையன்னியில் முக்காமல் போட வேண்டும்.

மூத்திரம் சுத்த ஜலத்தைப்போலிருக்கவேண்டும், வர்ணமில்லாமலிருக்க வேண்டும். நீர்விடும்போது மாடுகளுக்கு சிரமமிருப்பதாகத் தெரியக் கூடாது.

மேல் சொன்ன அரோக திடகாத்திரத்தின் சின்னங்கள் எந்த விதத்திலாவது எள்ளளவாவது மாறுபட்டால் அந்த நிலைமையை வியாதி, சீக்கு என்று சொல்லுகிறோம். சீக்குக்கண்ட சமயத்தில் ஏற்படும் மாறுபாடுகளே நமக்கு வெளிப்படையாய் தெரிவிக்கும் குணங்கள்தான் சின்னங்கள்.

மைசூர் இரும்புத் தொழிற்சாலை

[மைசூர் இரும்புத் தொழிலைப்பற்றி சில முக்கிய விஷயங்களைக் கீழே தருகிறேம். இந்தியத் தொழில் வளர்ச்சியில் அக்கரை உள்ளவர்களுக்கு இக் குறிப்பு மிகவும் உபயோகமாயிருக்கும்.]

சமஸ்தானத்திலுள்ள உலோகப் பொருள்களையும் காட்டிலுள்ள மூலப் பொருள்களையும் உபயோகப் படுத்திக் கொள்வதற்காக மைசூர் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டது. சுமார் 50 ஏகர் கொண்ட பெரிய இடத்தில் இத்தொழிற்சாலை அமைக்கப் பட்டிருக்கிறது. 1918-ம் வருஷத்தில் தொழிற்சாலை கட்ட ஸாங்க்ஷன் ஆகி 1923ம் வருஷத்திலிருந்து நிர்மாண வேலை ஆரம்பிக்கப் பட்டது.

பத்ராவதியிலிருந்து 24 மைல் தூரத்திலுள்ள கெம்மங்குடி மலையில் இரும்பு வெட்டி எடுக்கிறார்கள். மலையிலிருந்து கம்பிவழியாய் அடிவாரத்துக்கு மண்ணுடன்கலந்த இரும்பைக் கொண்டு வருகிறார்கள். காட்டிலுள்ள மரங்கள் அடுப்புக்கு உபயோகப் படுகின்றன. நூறு மைல்கள் நீளமுள்ள டிராம் பாதைகள் மூலம் பொருள்களை தொழிற்சாலைக்குக் கொண்டுவருகிறார்கள். தொழிற்சாலை பத்ரா நதிக்கரையில் அமைந்திருப்பதால் ஜலவசதிக்குக் குறைவே இல்லை.

மின்சார அடுப்புக்கள் உதவியால் மண்ணுடன் கலந்த இரும்புத்தூள் உருக்கப் படுகிறது. அடுப்புக்கு காற்றுக்கொடுக்க ஓர் இஞ்ஜின் இருக்கிறது. அந்தக்காற்று எஞ்ஜின் 1000 டிக்ரி உஷ்ணம் உள்ள ஜ்வாலையால் உஷ்ணப் படுத்தப்படுகிறது. அதிலிருக்கும் உஷ்ணக்காற்று 6 துவாரங்கள் வழியாக அடுப்புக்குப்போய் சேருகிறது. அடுப்பிலிருக்கும் இரும்பில் பல மாறுபாடுகள் ஏற்பட்டு கடைசியில், மண் கலந்த இரும்பு அசல் இரும்பாக மாறுகிறது. இப்படி உருக்கின இரும்பை மணல் பரப்பில் கொட்டி விடுகிறார்கள்.



மண்ணுடு கலந்த இரும்பு*

இதற்கெல்லாம் மின்சார சக்தி வேண்டுமல்லவா? தொழிற் சாலைக்கு வேண்டிய மின்சார சக்தியைக் கொடுக்கத்தக்கசக்திவாய்ந்த 'பவர் ஹவுஸ்' ஒன்று இருக்கிறது. அடுப்புக்கு உஷ்ணக் காற்று கொடுக்கும் எஞ்ஜினும் இங்கே அமைக்கப் பட்டிருக்கிறது.

இரும்புக்குழாய்கள் செய்வதற்கான ஓர் 'பைப் பவுண்டரியும்' இருக்கிறது. பிரிட்டிஷ் என்ஜினீயரிங் ஸ்டாண்டர்ட் அஸோஸியேஷனின் விதிகளின் படி 2½ அங்குலத்திலிருந்து 30 அங்குலம் வரையில் குறுக்களவுள்ள குழாய்கள் செய்யப்படுகின்றன. தேக உழைப்பை நீக்கும் பொருட்டு மின்சாரத்தால் இயக்கப்பட்ட இயந்திரங்கள் உள்ளன. இரும்பை வார்க்கும்போது தேவையான மணல் முதலிய பொருள்கள் நன்றாகப் பரிசிலனை செய்யப்படுகின்றன. உருக்கிய இரும்புத் திராவகம் குழாய் ஸ்வரூபத்தில் வார்க்கப்படுகிறது. பிறகு, இரும்பு

குளிர்ந்ததும், குழாய்கள் எடுக்கப்பட்டு சுத்தப் படுத்துவதற்கு அனுப்பப்படுகின்றன.

குழாய்களைப் பரிசோதனை செய்வதற்கான 'இயந்திரம் 'ஹைட்ராலிக் அக்யுமுலேடரை' பெற்றிருக்கிறது. குழாய்களை அதன் வகுப்புக்குத்தக்கவாறு பிரித்து குணத்தைப் பரிசீலனை செய்ய இந்த இயந்திரம் உதவுகிறது. பரிசீலனையில் திருப்தி அளித்த குழாய்கள் நிறுக்கப்பட்டு கருப்பு வர்ணம் பூசப்படுகின்றன.



தொழிற்சாலையில் தயாரான இரும்புக்குழாய்*

'ஜெனரல் பவுண்டரி' தொழிற்சாலையில் பழுதான சாமான்களை சரிபார்க்கிறது. வெளிவேலைகளையும் கொஞ்சம் கவனிக்கிறது. ஜெனரல் பவுண்டரியில் முக்கியமாக, நீர் குழாய்களும், கதவுகளும், வீட்டுச் சாமான்களும் செய்யப்படுகின்றன. ரிபேர் செய்வதற்கு வேண்டிய சகல சாமான்களும் பவுண்டரியில் இருக்கின்றன.

தொழிற்சாலைக்கு ஒரு மைல் தூரத்தில் தொழிலாளர் வசிப்பதற்காக 'நியூ டவுன்' கட்டப்பட்டிருக்கிறது. இதில் தண்ணீருக்காக ஒரு ரிஸர்வாயரும், அதை வடிக்கட்ட 'பில்டரும்' அமைக்கப்பட்டிருக்கின்றன. சாக்கடை வசதி, சுகாதார வசதி எல்லாம் உண்டு. ஒரு பிரைமரி ஸ்கூலும், டிஸ்பன்ஸரியும், பாங்கியோடு கூடிய கோவாபரேடிவ் ஸொஸைடியும் இருக்கின்றன. ஒரு கிளப்பும் இருக்கிறது.

மூலப் பொருள்கள் கொண்டு வருவதில் சம்பந்தப் பட்டிருப்பவர்களையும் சேர்த்து 5000 பேர்கள் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள்.

இந்த இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பித்து ஆறு வருஷங்கள் ஆகின்றன. தொழில் அனுபவத்தில் பிற்போக்கான ஓர் பிரதேசத்தில் இத்தகைய தொழிலை ஏற்படுத்தி நடத்தும்போது சகஜமாக உண்டாகக் கூடிய கஷ்டங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நீக்கப்பட்டு விட்டன. குறைந்த செலவிலேயே இரும்பு தயாராகிறது. ஏனென்றால் ஏராளமான மூலப் பொருள்கள் சமஸ்தானத்தில் கிடைப்பதால். போட்டியால் விலை கீழே போவதால் தொழிற்சாலையைத்திடமான நிலையில் நிற்கச்செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் வழியில்லாமல் இருக்கிறது.

மைசூரில் மாங்கனீஸ், க்ரோம் போன்ற பல உலோகச் செல்வங்கள் நிறைந்திருக்கின்றன. இன்னும், மின்சார வசதியும் இருக்கிறது. இந்த மூலப் பொருள்களைக்கொண்டு புதிய தொழில்களை ஏற்படுத்த பல திட்டங்களை அதிகாரிகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்போது தொழிற்சாலைகள் விருத்தியடைவதல்லாமல் இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்கும் ஓர் உதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

மைசூர் சந்தன பாக்டரியிலிருந்து பின் வரும் சாமான்கள் வரப்பெற்றோம்:

1. நல்ல வாசனையுடன் கூடிய சோப்புகளில் ஏழு ரகங்கள். (துணி சோப் உள்பட)
2. வானிஷிங் கிரீம்களில் மூன்று ரகம்.
3. தந்தப் பல்பொடி
4. ஒரு ஷேவிங் ஸ்டிக்
5. ஒரு ஐயோடோ க்யூர்

ஜெய பாரதம் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட ஒரு பாட்டில் டைஜஸ்டோ வரப் பெற்றோம்.

---

* Photos: By Courtesy of the Govt. of Mysore.